# ‘டால்மியாபுரம்’ கல்லக்குடி என மாறுகிறது;

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 318
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மார்கழி 13 ஷவ்வால் 18 ஞாயிற்றுக்கிழமை [28-12-69]

புததாண்டை
புதுமையுடன் கொண்டாட
உங்களுக்கும் உங்கள் குழந்தைச்
செல்வங்களுக்கும் தேவையான
சகலவிதமான
ஜவுளிவகைகளும்
றெடிமேட் உடுப்புகளும்
மலிவான விலைகளில்
பெற்றுக்கொள்ளலாம்.

விக்னேஸ்வரா
ஜவுளிமாளிகை
(பஸ் நிலையத்துக்குமுன்) யாழ்ப்பாணம்.

## மத்திய அரசு சம்மதம்
## கருணாநிதி தகவல்

சென்னை, டிச 27

தமிழ்நாட்டிலுள்ள டால்மியாபுரம் ரயில் நிலையத்தின் பெயரை பழங்காலத்தில் வழங்கப்பட்டுவந்த கல்லக்குடி என மாற்றுவதற்கு மத்திய அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

இத்தகவலை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இன்று பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

டால்மியாபுரம் ரயில் நிலையத்தின் பெயரை கல்லக்குடி ரயில்நிலையம்என மாற்றுவதற்கு மத்திய அரசு சம்மதம் தெரிவித்து உள்துறை அமைச்சர் திரு. சவான் தமக்கு எழுதிய கடிதத்தை திரு. கருணாநிதி நிருபர்களிடம் வாசித்துக் காட்டினார். கல்லக்குடி பெயர் மாற்றம் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்று திரு. சவான் தமது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்:

கல்லக்குடி பெயர்மாற்றம் தமிழ்உணர்வுகொண்ட அனைவரும் பூரிப்படைய வேண்டிய நிகழ்ச்சி என்று முதல்அமைச்சர் கருணாநிதி கூறினார்.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சிபீடத்திலிருந்தபோது டால்மியாபுரம் ரயில்நிலையத்தின் பெயரை கல்லக்குடியாக மாற்றவேண்டுமெனக்கோரி திரு. மு. கருணாநிதியின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் ரயில்நிறுத்தப் போராட்டம் நடத்தியதும் கருணாநிதி உட்படப் பலர் கைதுசெய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது

# தலவாக்கொல்லைதோட்டத்தில் பொலிஸ்-தொழிலாளர் மோதல்

## பலர் காயம்; 24 பேர் கைது
### ஆயுதம் தாங்கிய பொலிசார் விரைந்தனர்

கொழும்பு சனி

தலவாக்கொல்லை மடக்கும்பரைத் தோட்டத்தில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளருக்கும் பொலிசாருக்குமிடையே இன்று இரண்டாவது நாளாக மீண்டும் பலத்தமோதல் ஏற்பட்டது. இதுசம்பந்தமாக 24 பேர் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்தனர்.

இரண்டு தொழிற்சங்கங்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்புகளைத் தடுக்கச்சென்ற பொலிசாரே இவ்விதம் தொழிலாளர்களால் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இங்கு நிலவிவரும் அமைதியின்மையைச் சமாளிப்பதற்காக ஹட்டன், இரத்தினபுரி, கொழும்பு ஆகிய இடங்களிலிருந்து ஆயுதம்தாங்கியபொலிசார் ஸ்தலத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

திரு சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி ஆதிக்கத்திலுள்ள தொழிற்சங்க ஊழியருக்கும், திரு. தொண்டமான் தலைமையிலான தொழிற்சங்கத்துக்குமிடையே இன்று பலமான தாக்குதல் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது, கலகக்காரரைத் தடுக்க பொலிசார் குண்டாந்தடிப் பிரயோகம் செய்தனர்.

[illegible]கும் தொழிலாளருக்குமிடையே ஏற்பட்டகைகலப்பின்போது பொலிசார் பலர் காயமடைந்ததும் தெரிந்ததே.

[illegible]தொழிலாளர்கள் பாலங்களை உடைத்தும், வாய்க்கால்களைச் சேதப்படுத்தியும் கலகத்தைத் தூண்டியபோது [illegible] தாக்கச் சென்ற [illegible] [illegible]றைய தினம் தாக்கப்[illegible]

## ‘திருமலைக்கு விரைவில் கனிஷ்ட பல்கலைக்கழகம்’

திருக்கோணமலை, சனி

“திருமலையில் விரைவில் ஒரு கனிஷ்ட பல்கலைக்கழகம் நிறுவப்படுமென்றும் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை கல்வி இலாகா கவனித்து வருவதாகவும் தேசிய உயர் கல்விச் சபைத் தலைவர் டாக்டர் மலலசேகரா தெரிவித்தார்.”

திருமலையில் நடைபெற்ற அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் மகாநாட்டில் கலந்துகொள்ள வந்திருந்த தேசிய உயர் கல்விச்சபைத் தலைவர் டாக்டர் ஜி. பி. மலலசேகரா மேற்கண்டவாறு தெரிவித்ததாக கோணேஸ்வரப் பரிபாலன சபைத் தலைவர் டாக்டர் கே. எஸ். சித்திரவேலு கூறினார்.

வடமாகாணத்தில் நிறுவப்படவிருக்கும் கனிஷ்ட பல்கலைக்கழகம் போல் இங்குள்ள மாணவர்களின் குறையை நீக்குவதற்கு ஏற்ற ஒரு பூரணமான கனிஷ்ட பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு முடிவு செய்திருப்பதாகவும். இங்கு நிறுவப்படும் கனிஷ்ட பல்கலைக் கழகத்தில் சகல துறைக் கல்வியும் போதிக்கப்படுமென்றும் திரு. மலலசேகரா குறிப்பிட்டதாகவும் அவர் தெரிவித்தார்

யாழ் ஆஸ்பத்திரியில்

## அரசாங்க ஊழியர்களுக்கு வைத்திய சோத[illegible]யில்லை

## “நிஜலிங்கப்பாவை பதவிநீக்கியது சரியே”

பம்பாய், டிச. 27

திரு நிஜலிங்கப்பாவை கட்சித்தலைவர் பதவியிலிருந்து விலக்கிய முந்திய தீர்மானத்தை பம்பாயில் கூடியுள்ள காங்கிரஸ் கட்சியின் விஷயாலோசனைக் கமிட்டி ஒருமனதாக ஏற்றுக் கொண்டது

இதன் மூலம் நிஜலிங்கப்பாவும் அவரை ஆதரித்த காரியக்கமிட்டி உறுப்பினர்களும் மேற்கொண்ட நடவடிக்கைகள் செல்லுபடியாகாமல் செய்யப் பட்டிருப்பதாக நிருபர்கள் கூறினார்கள்.

திரு நிஜலிங்கப்பாவை கட்சித் தலைமைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு இடைக்கால தலைவராக திரு சி சுப்பிரமணியத்தை புதுடில்லியில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ்கமிட்டி நியமித்தது இந்த நடவடிக்கையை இப்பொழுது பம்பாயில் நடைபெற்ற இந்திரா ஆதரவு காங்கிரஸ் கட்சியின் விஷயாலோசனைக் கமிட்டி ஏற்றுக்கொண்டது.

இந்திரா ஆதரவு காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக உணவு அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் தெரிவு செய்யப்பட்டது தெரிந்ததே திரு ஜெகஜீவன்ராம் நேற்று காங்கிரஸ்கொடியை ஏற்றிவைத்து புதிய பதவியை ஏற்றுக்கொண்டார்.

## தமிழ்நாடு, மைசூர், கேரளம்
## முதலமைச்சர்கள் டில்லியில் கூடிப்பேசுவர்

சென்னை, டிச 27

தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. கருணாநிதி, கேரள முதலமைச்சர் திரு அச்சுத மேனன் மைசூர் முதலமைச்சர் திரு வீரேந்திரபாட்டில் ஆகிய மூவரும் அடுத்த வருடம் தங்கள் ராஜ்யங்களுக்கிடையிலான ஆற்றுநீர்ப் பிரச்னைகள் பற்றி புதுடில்லியில் கூடிப் பேசவிருக்கிறார்கள்.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் காவேரி ஆற்றில் நிர்மாணிக்கத் தீர்மானித்திருக்கும் அணைக்கட்டுப்பற்றியும் இந்தக் கூட்டத்தில் வாதிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காவேரி ஆற்றில் மைசூர் அரசு அணைகள் அமைக்கத் தீர்மானித்திருப்பது குறித்து இரு ராஜ்யங்களுக்கிடையில் தகராறு எழுந்துள்ளது.

## ஜப்பானில் நேற்று நடந்த தேர்தல்

டோக்கியோ, டிச. 27

ஜப்பானில்இன்றுபொதுத் தேர்தல் நடைபெற்றது. 7 கோடி மக்கள் இத் தேர்தல் வாக்களிப்பில் கலந்து கொண்டனர்.

## அராலி கி. ச. காணிப் பிரச்னை

அராலி, சனி

அராலி கிராமசபை தனக்கென ஓர் அலுவலகத்திற்குக் காணி ஒன்றை வாங்கத் தீர்மானித்துள்ளது. இதற்கென அரசாங்க ந[illegible]கா

## கி. ச. தலைவர்களை மக்கள் தெரியவேண்டும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கிராமசபைத் தலைவர்களை கிராமமக்களே வாக்களிப்பின் மூலம் தெரிவு [illegible]

வழங்காமல் பிற[illegible] கிராமங்களுக்கு ரூ 6,[illegible] நிதிவழங்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் ஆஸ்பத்திரியில்

## அரசாங்க ஊழியர்களுக்கு வைத்திய சோத[illegible]யில்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு வைத்திய பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு வரும் அரசாங்க ஊழியர்கள் பரிசோதனை செய்யப்படாமல் திருப்பியனுப்பப்படுகிறார்கள்.

கடந்த பத்து நாட்களுக்குள் மட்டும் நூற்றுக்கும் அதிகமான ஆண், பெண், அரசாங்க ஊழியர்கள் இவ்வாறு திருப்பியனுப்பப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் நேற்றுச் சொன்னார்.

ஆஸ்பத்திரி ஆய்வு கூட ஊழியர்கள் தொடர்ந்து ஒரு மாதமாக வேலைநிறுத்தம் செய்து வருவதாலேயே வைத்திய பரிசோதனைகள் முற்றாக ஸ்தம்பிதமாகியுள்ளன.

பொலிஸ், கச்சேரி, கல்வி இலாகா, இராணுவம் போன்ற பல்வேறு துறையிலுள்ள அரசாங்க ஊழியர்களே வருட முடிவு வைத்திய பரிசோதனைக்கு ஆஸ்பத்திரிக்குச் சென்று திரும்பிச் சென்றவர்களாவர்.

(கா. நி)

காந்தி நூற்றுண்டையொட்டி

## இந்திய ஆட்சிமன்றம் மகாத்மாவுக்கு அஞ்சலி

புதுடில்லி, டிச. 26

காந்தி நூற்றுண்டு விழாவையொட்டி இந்திய பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் காந்திஜிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

சண்டையும் சச்சரவும் மலிந்துள்ள உலகத்திற்குச் சகோதரத்துவத்தையும் மனிதப்பண்பையும் போதித்து இந்திய நாட்டுக்கு யாராலும் பெற்றுக் கொடுக்க முடியாத சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த மகாத்மாவுக்கு அஞ்சலி செய்யக் கோரும் தீர்மானத்தை லோக்சபையில் சபாநாயகர் தில்லாலும், மேல் சபையில் திரு. பாதிக்கும் கொண்டுவந்த பொழுது எல்லா உறுப்பினர்களும் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

இவ்வஞ்சலியின் போது காந்தியின் சேவை குறித்து இரு சபைத் தலைவர்களும் சொற்பொழிவாற்றினர்.

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு புங்குடுதீவு கிழக்கு கலட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் இன்று மாலை 5 மணிக்கு தொண்டை மண்டலம் மெய்கண்டார் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிகபரமாசாரிய சுவாமிகள் 'காயமே கோயில்' என்ற பொருளில் அருளுரை நிகழ்த்துவார். உபந்நியாச சக்ரவர்த்திசுகப்பிரமம் எஸ். இராமசாமி சாஸ்திரியார் 'சுந்தரமூர்த்தி சுவாமிகள்' என்றபொருளில் அருளுரைநிகழ்த்துவார்கள்.

தலைமையிலான தொழிற்சங்கத்துக்குமிடையே இன்று பலமான தாக்குதல் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. கலகக்காரரைத் தடுக்க பொலிசார் குண்டாந்தடிப் பிரயோகம் செய்தனர்.

கடந்த திங்கட் கிழமை தொடக்கம் நடைபெற்று வரும் வேலைநிறுத்தத்தில் 3000 தொழிலாளர் ஈடுபட்டிருப்பதும், இங்கு நேற்றையதினம் பொலிசாருக்[illegible]ழிலாளர்கள் [illegible] கண் உடைத்தும், வாய்க்கால்களைச் சேதப்படுத்தியும் கலகத்தைத் தூண்டியபோது அமைதியைப் பாதுகாக்கச் சென்ற பொலிசார் நேற்றைய தினம் தாக்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர். இப்பகுதியில் பொலிசார் தாக்கப்பட்டது இன்றுடன் ஐந்தாவது முறை என்று பொலிசார் கூறினர்.

## இலங்கையிடம் இந்தியா இன்னிங்சால் தோல்வி

புதுடில்லி, டிச. 27

ஆமதாபாத் மாணவ கோஷ்டிக்கும் இலங்கை மாணவர் கோஷ்டிக்குமிடையே இன்று 2-வது நாளாக நடைபெற்ற 2-வது கிரிக்கெட் டெஸ்டில் இலங்கைக்கோஷ்டி ஆமதாபாத் கோஷ்டியை ஒரு இன்னிங்ஸ் 91 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பாரதம் முதலாவது இன்னிங்ஸ் 170. 2-வது இன்னிங்ஸ் 92.

இலங்கை முதலாவது இன்னிங்ஸ் 303.

ஆமதாபாத்தில் இப்போட்டி நடைபெற்றது.

5-வது டெஸ்ட்

## ஆஸ். —153 இந்தியா 82-2

சென்னை, டிச. 27

ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் சென்னையில் நடைபெறும் 5-வது கிரிக்கெட்போட்டியின் 3-வது நாளான இன்றைய ஆட்டம் யார் வெற்றி பெறுவார்கள் என்று நிச்சயமாகக் கூறமுடியாதபடி முடிவடைந்துள்ளது.

2-வது இன்னிங்ஸில் ஆஸ்திரேலியாக்கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் அடுத்தடுத்து இழந்து மொத்தம் 153 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

இந்தியா 2-வது இன்னிங்ஸில் இன்றைய ஆட்டம் முடியும்போது இரண்டு விக்கெட்டுகளை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தியா இப்போட்டியில் வெற்றிபெறுவதற்கு இன்னும் 167 ஓட்டங்களைப் பெறவேண்டும். ஆனால் அவர்கள் கைவசம் இன்னும் 8 விக்கெட்டுகள் மட்டுமே உள்ளன.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸ் 258 ஓட்டங்கள், இந்தியா 9—163 ஓட்டங்கள்

## கண்வைத்தியர்

யாழ்ப்பாணம், ஞாயிறு காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு நிரந்தரமான ஒரு கண்வைத்திய நிபுணர் நியமிக்கப்பட மாட்டார் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அராலி, சனி

அராலி கிராமசபை தனக்கென ஓர் அலுவலகத்திற்குக் காணி ஒன்றை வாங்கத் தீர்மானித்துள்ளது. இதற்கென அரசாங்க ந[illegible]கொடைப் பணமும் அ[illegible]காரமாகியுள்ளதென அறியப்படுகிறது. ஆனால் காணி ஒரு பொருத்தமான இடத்திலில்லையென்றும், விலை அதிகரித்துள்ள ஒரு பகுதியில் காணி தெரிவுசெய்யப்பட்டிருப்பதாக அராலியிலுள்ள சில சனசமூக நிலையங்கள், முன்னேற்றச்சங்கங்களின் நிர்வாகிகள் ஒன்றுசேர்ந்து ஓர் ஆட்சேபனை மனுவை தயார் செய்து உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்ப முடிவு செய்துள்ளார்கள். அராலிக்கு ஒரு கிராமசபை வேண்டுமென்று உள்ளூராட்சி அமைச்சருக்கனுப்பியிருந்த ஆரம்ப மகஜரில் கிராமசபை அமைய வேண்டிய இடம் முன்னதாகவே குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அந்த இடம் தற்போதைய கிராமசபையினரால் நிராகரிக்கப்படுமானால், அமைச்சரின் தலையீடு கோரி இன்னொரு மகஜர் தயாரிக்கப்படுமென்றும் ஒரு முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் கூறுகிறார்.

## கொழும்பு மேயர்

கோட்டை சனி

கொழும்பு மாநகரசபையின் மேயராக திரு. வின்சென்ட் பெரேராவை நியமிப்பதென இன்று மாலை ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில் கூடிய ஐக்கியதேசியக்கட்சி காரியக்கமிட்டி தீர்மானித்தது. ஜனவரி 2-ம் வாரம் தேர்தல் நடைபெறும்.

யில் கூடிப் பேசவிருக்கிறார்கள்.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் காவேரி ஆற்றில் நிர்மாணிக்கத் தீர்மானித்

## இங்கு மின்சார வசதி

பருத்தித்துறை, சனி

கோவிற்கடவைக்கிராம முன்னேற்றச்சங்கம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க நெல்லியடிப்பட்டின சபை எல்லைக்குட்பட்ட ஞானசாரியர் வீதி, கோவிற்சந்தை-கலிகை வீதி; நுணுவில் விநாயார் கோவில், நுணுவில் கிறீஸ்தாலய வீதி, கோவிற்கடவைப்பகுதி, தலவத்தை-மித்தில் வீதி ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க உள்ளூர் ஆட்சிப்பகுதியினர் இணங்கியுள்ளனர்.

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்தின் முயற்சியால் கலிங்கராயன் வீதி திருத்தத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 10,000 வையும் சிறந்த முறையிற்பயன்படுத்தவும் மேற்படி கிராம முன்னேற்றச்சங்கம் தீர்மானித்துள்ளது.

## மக்கள் தெரியவேண்டு[illegible]

யாழ்ப்பாணம், ஞாயிறு கிராமசபைத் தலைவர்களை கிராமமக்களே வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யவேண்டும் என்று கோரும் தீர்மானம் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வடபகுதி கிராமசபைத் தலைவர்கள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

புலோப்பளை கிராமசபை தலைவர் திரு. ஏ. ஜி. ராஜசூரியர் தலைமையில் நடைபெற்ற இம் மகாநாட்டில் நாளை ஜெயசூரியா கமிஷனைச் சந்தித்து பேட்டி காண்பதற்கு 7பேர் கொண்ட குழுவொன்று தெரிவு செய்யப்பட்டது.

இந்தக்குழு மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஜெசூரியா கமிஷன் முன்சமர்ப்பிக்கும்.

கமிஷனிடம் சமர்ப்பிப்பதற்கு நிறைவேற்றப்பட்ட மற்றையதீர்மானங்கள் வருமாறு:-

0 நிதிகுறைந்த கிராமசபைகளுக்கு ஜனத்தொகையையும், அவர்கள் சேர்க்கும் வரியையும் அடிப்படையாக வைத்து மான்யம் வழங்காமல் பிற்போ[illegible] கிராமங்களுக்கு ரூ [illegible] நிதிவழங்க வேண்டும்.

0 மத்திய வங்கிக்கடன்கள் நேரடியாக கிராமசபைகளுக்கு (பிரயோசனமளிக்கும் திட்டங்களுக்கு) வழங்கப்படவேண்டும்.

0 மின்சார விநியோகத் திட்டத்தை மின்சார இலாகா நினைத்தபடி செய்யாமல், கிராமசபைகளுடன் யோசித்துச் செய்ய வேண்டும்.

ஜெயசூரியா கமிஷனைப் பேட்டிகாண்பதற்கு தெரிவு செய்யப்பட்ட குழு அங்கத்தவர்கள் வருமாறு:-

புலோப்பளை கிராமசபை தலைவர் திரு ஏ ஜி ராஜசூரியர்; மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு வி பொன்னம்பலம், கோப்பாய் கிராமசபைத்தலைவர் திரு. சி. பரமானந்தராசா நாவற்குழி கிராமசபைத் தலைவர் திரு சடாச்சரம், மண்டைதீவு கிராமசபைத் தலைவர் திரு கைலாசபிள்ளை, மானிப்பாய் கிராமசபைத் தலைவர் திரு மார்க்கண்டு, வேலணை கிராமசபைத் தலைவர் திரு சதாசிவம்,

## பிரமாண்டமான அலைகளை சமாளித்து மீண்டும் படகுச்சேவை

நெடுந்தீவு, சனி

நெடுந்தீவிற்கும் குறிகாட்டுவானுக்கு மிடையேயான படகுசேவை இரண்டு நாள் நிறுத்தி வைக்கப்பட்டு இன்று காலை பிரமாண்டமான அலைகளைச் சமாளித்துக் கொண்டு சில்வஸ்பிறேயும் 'எலாரு'வும் நெடுந்தீவில் இருந்து புறப்பட்டு குறிகாட்டுவானுக்கு வந்து சேர்ந்தன. காலநிலை அமைதியாக இருந்தமையால் புறப்பட்ட இரண்டு மோட்டார் படகுகளும் எதிர்பாராத அளவு அலைகளை பெரும் சிரமத்தோடு சமாளிக்க வேண்டிய கஷ்டமான நிலை நடுக்கடலில் ஏற்பட்டது. பிரயாணிகளும் சிப்பந்திகளும் பெரும் திகில் அடைந்த போதிலும் இரண்டு படகுகளும் தெய்வாதீனமாக கரை வந்து சேர்ந்தன. மீண்டும் நெடுந்தீவிற்குப்போவதற்கு சற்று யோசித்துத்தான் புறப்பட வேண்டுமென சிப்பந்திகள் கூறினார்கள். திரு. கந்தையாவும் திரு. வடிவேலுவும் முறையே சில்வஸ்பிறேக்கும் எலாருவுக்கும் தண்டேல்களாக கடமையாற்றினார்கள்.


சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

ONE-DOLLAR

டொலர் அலுமினியம்



தென்னிலங்கை வாசகர்களுக்கு

ஈழநாடு

அளிக்கும்

பொங்கல் கலைவிழா

நிகழ்ச்சிகள் சில:

பேச்சு:

பேராசிரியர் வண. தனிநாயகம் அடிகளார் 'நம் பண்பாட்டின் மறுமலர்ச்சி'

நாடகம்:

கொழும்பு கொமெடியன்ஸ் அளிக்கும் முழுநீள நகைச்சுவை நாடகம் 'காதல் ஜாக்கிரதை'

மெல்லிசை

திருமலை கோணேஸ் பரமேஸ் குழுவினர் அளிக்கும் 'மெல்லிசை விருந்து'

இடம்: சரஸ்வதி மண்டபம்

நாள்: 14-1-70 நேரம்: மாலை 5-30

தென்னிலங்கை வாசகர்கள் தங்களுக்குத் தேவையான இலவச நுழைவுச் சீட்டுகளுக்கு "ஈழநாடு" கொழும்பு அலுவலகம், 142, புதுபுல்லர்ஸ் வீதி, கொழும்பு-4 (தொலைபேசி: 86811) என்ற முகவரிக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

யாழ். வைத்தியசங்கத்திற்கு ஒரு நூலக உதவியாளர். ஆங்கில அறிவில் தேர்ச்சி அவசியம். தட்டெழுத்து அனுபவம் உடையோர் விரும்பப்படுவர். சம்பளம் 75 — 90 ரூபா. டாக்டர் மு. சண்முகதாசா, அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 2-1-70க்கு முன் விண்ணப்பிக்கவும். 1730

---

மெக்கானிக்:

றேடியோக்கள், ரேப் றெக்கோடர்கள், அம்பிலிபியேர்ஸ் திருத்துவதில் அனுபவமுள்ள மெக்கானிக் தேவை. அனுபவம், எதிர்பார்க்கும் சம்பளம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். செல்வலக்ஷ்மி, 37, 39, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 1733

---

கூட்டுறவுப் பயிற்சி பெற்ற புடவை வியாபாரத்தில் அனுபவமுடைய காசுப் புத்தகம் எழுதக் கூடிய உதவி முகாமையாளர் தேவை. 10-1-70க்கு முன் விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும். சம்பளம் 120 ரூபா. அ. சுப்பிரமணியம், செயலாளர், கணேசன் ஐ. ப. சங்கம், காரைநகர். 1737

---

### விற்பனைக்கு

E L 2131 போட் கொன்சல் கார் புத்தம் புதிய நிலையில் விற்பனைக்குண்டு. பெயின்ற், மெத்தை புதியவை. பற்றரி, ரயர் நல்ல நிலையில் உள்ளது. தொடர்பு கொள்க. ஏ. ஐயாத்துரை, உப்புக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு. 1735

---

வேம்பு, முதிரையால் செய்யப்பட்ட கதவுகளும், யன்னல்களும் விற்பனைக்குண்டு. விசாரிக்கவும். 148, அரசடி றோட், கந்தர்மடம். 1620

---

### கல்வி

1-ம் வகுப்பிலிருந்து 8-ம் வகுப்பு வரை தரம் வாய்ந்த ஆசிரியையால் சகல பாடங்களும் 1-1-70ல் இருந்து கற்பிக்கப்படும். விபரங்கட்கு: 107, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 1736

---

## பிஸ்க்கால் கொமிசன் விற்பனை

பிஸ்க்கால் இல: 67/69
இலக்கம் 2341
வவுனியா பிரதி பிஸ்கால் ஆபிசில்
19 டிசம்பர் 1969.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில்.

ராஜசிவகுரு, முல்லைத்தீவு
வழக்காளி

விரோதமாக

1. மாரியப்பர் செல்லையா
2. மாரியப்பர் நல்லையா
எதிராளிகள்

வட்டுவாகல் முல்லைத்தீவு

இதன்கீழ் காணப்படும் ஆதனத்தின் மேற்சொல்லிய வழக்கில் எதிராளிகளுக்கு உடைய உரித்தையும் பிரயோசனத்தையும் 1970 ஆண்டு ஜனவரி மாதம் 19 திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு காணியில் பிரசித்த வெந்தீசில் விற்கப்படுமென்று இத்தாலறிவிக்கப்படுகிறது. அதாவது:-

### ஆதனத்தின் விபரம்

வடமாகாணம் வவுனியா டிஸ்திறிக் கரைத்துறைப் பற்று கரிக்கட்டுமூலை வடக்கு வெள்ளாமுள்ளிவாய்க்கால் ''குழந்தையத் தாய் குருமன்'' என்னும் ஆதனம் இதன் விஸ்தீரணம் 6 ஏக்கர் 2 றூட் 36 பேட்சஸ். இதிற் சொரியலாய் அரைவாசி. இவ்வாதனம் வவுனியா காணிப்பதிவகத்தில் இருமடித்தாள் இல. ஏ. 20/212ல் பதியப்பட்டிருக்கிறது.

### இதன் எல்லைகள்

கிழக்கும்-தெற்கும்: முடிக்குரிய ஆதனம்.

மேற்கு: சின்னையா துரையப்பாவின் ஆதனம்.

வடக்கு: றோட்டு.

கொமிசன் தொகை: ரூபா 1500/-

வட்டி: 10-9-67-லிருந்து 26-6-68வரை ரூபா 1500/-க்கும் 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் கடன் அறவிடும்வரை 5 வீத வட்டி.

செலவு: ரூபாய் 269/12 பிஸ்கால்கட்டணமும் பவுண்டேச்சும் அறவிடப்படும்.

ஆ. குணநாயகம்,
மேலதிக பிரதி பிஸ்கால்.
பிரதி பிஸ்கால்
அலுவலகம்,
வவுனியா. 1895

---

## விசேஷ ஆராதனை

ஊரதீவு, சனி

புங்குடுதீவு கந்தகோட்...

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 28—12—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 நானைய சந்ததி, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 வாத்தியஇசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 துதிப்பாடல்கள், 7-35 முத்திநெறி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கர்னாடகஇசை, 10-30 செய்திச்சுருக்கம்.......

## வல்வை வெற்றி

பருத்தித்துறை, சனி

வதிரி தமிழ்மன்றத்தின் ஆதரவில் செல்வன் ஆ. கந்தசாமி ஞாபகார்த்தத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில். வல்வை 'ஸி' பிரிவுக் கோஷ்டிக்கும் கொற்றாவத்தை சிவானந்தாக்கோஷ்டிக்கு மிடையில் நடைபெற்ற போட்டியில் வல்வை ஸி' பிரிவு 1—0 கோலால் வெற்றியீட்டியது. நல்லதம்பியின் ஆட்டம் பாராட்டத்தக்கதாக அமைந்தது. எஸ். சிவதயாபரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். ......

## 'ஜீவனும்சம் கட்ட பணமில்லை'

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவு வண்ணான் குளம் வாசியான சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை என்பவர் தமது பிள்ளைகளுக்கு ஜீவனும்சப் பணமாக ரூபா 100/- கட்டக் காசு இல்லையென்றும் ரூபா 30 மாத்திரம்தான் உண்டு என்...

# வடக்கு, கிழக்கில் சுதந்திரக் கட்சி போட்டியிட முடிவு

கோட்டை, சனி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அடுத்த பொதுத் தேர்தலில் வடக்கிலும், கிழக்கிலும் போட்டியிடுவதென முடிவுசெய்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள எல்லாத் தொகுதிகளிலும் வட மாகாணத்தில் மூன்று தொகுதிகளிலும் போட்டியிடுவதெனக் காரியக்கமிட்டி தீர்மானித்துள்ளது.

கட்சித் தலைவர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவும் 5 உப-தலைவர்களும் ஒன்றுகூடி இந்த முடிவைக் கடந்த வாரத்தில் எடுத்தனர்.

வட மாகாணத்தில் சுதந்திரக்கட்சி போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ள இடங்கள், கிளிநொச்சி, வவனியா, யாழ்ப்பாணம் ஆக இருக்கலாமென அறியப்படுகிறது.

# ''வேலையற்ற வாலிபர்களை பயன் படுத்தி பதவிவர முயல்கிறார்கள்''

கோப்பாய், சனி

''இன்றையநிலையில் வேலையற்றவர்களை ஒரு தேர்தல் ஆயுதமாகப் பயன்படுத்தி அரசாங்கமும், கட்சிப் பிரதிநிதிகளும் பதவிக்கு வர முயற்சிக்கிறார்களேயன்றி அவர்களது பிரச்சினைகளில் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறார்களில்லை. வேலையற்ற பட்டதாரிகளால் பிரதம மந்திரிக்கு அனுப்பப்பட்ட மகஜருக்கும் இதுவரை பதிலுமில்லை. இந்த நிலையில் எமது சங்கங்களை நல்ல முறையில் வளர்ச்சியடையச் செய்து அகில இலங்கையிலும் சங்கத்தை விரிவுபடுத்தி நேரடியான அகிம்சை வழிப் போராட்டத்தில் ஈடுபடுவதே சிறந்ததாகும். ஆகவே இப்பிரச்சினையை மேலும் அரசாங்கம் நீடிக்கவிடாது நிறைவேற்றப்பட்ட புதிய திட்டத்திற்கு அமையச் சகலருக்கும் வேலைவாய்ப்பு வழங்க உடன் ஆவனசெய்ய வேண்டும்.''

மேற்கண்டவாறு வேலையற்ற வாலிபர் சங்கத்தின் கூட்டமொன்றில் அதன் சங்கத் தலைவர் திரு. கே. சதானந்தன் பேசுகையில் ஆலோசனை தெரிவித்தார்.

இஸ்லாமிய சோஷலிஸ்ட் வாலிபர்சங்கம், 'தீவுப்பகுதி வேலையற்ற வாலிபர் சங்கம் யாழ்ப்பாணப் பகுதி வேலையற்ற வாலிபர் சங்கம், அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் வேலைவாய்ப்புக்கான நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டன.

இறுதியில் உயர் தராதர வகுப்பில் கல்வி பயிலும் பாடசாலை மாணவர்களையும் சேர்த்து வேலையற்ற வாலிபர்களனைவரும் ஊர்வலம் நடத்தி, பகிரங்கக் கூட்டம் மூலம் பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவது என்னும் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. ......

## பெப்ரவரியில் 'சம்பத' சீட்டிழுப்புகள்

கோட்டை, சனி

ஜனவரியில் ஜாதிக சம்பத சீட்டிழுப்பு நடைபெறுதெனவும் பெப்ரவரி மாதம் இரு ஜாதிக சம்பதசீட்டிழுப்பும் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பெப்ரவரி 2-ம்திகதி 11-வது சம்பத சீட்டிழுப்பும், பெப்ரவரி 23-ம்திகதி 12-வது ஜாதிக சம்பத சீட்டிழுப்பும் நடைபெறவிருக்கின்றன. இவ்விரு சீட்டிழுப்புகளில் ஒன்று கண்டியிலும் மற்றது காலியிலும் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சேவைக்கு பாராட்டு

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவில் உதவி தபாலதிபர்களாகக் கடமையாற்றி இடமாற்றலாகிச் செல்லும் வே. பொன்னையா திரு கே. சிவபாதசுந்தரம் திரு ஒஸ்ரின் ஆகியோருக்கு...

## 11 பேர் தற்காலிக வேலை நீக்கம்

ஒட்டுசுட்டான் விவசாயப்படை முகாமைச் சேர்ந்த 11 பேர் தற்காலிக வேலைநீக்கஞ் செய்யப்பட்டுள்ளனர். சமீபத்தில்இங்கு நடைபெற்ற கைகலப்புச் சம்பந்தமாகவே இவ்விதம் நடந்துள்ளதாகத் [illegible] தெரிய...

## விபத்தில் இளைஞன் காயம்

பருத்தித்துறை, சனி

நெல்லியடியிலிருந்து பருத்தித்துறையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தவான் ஒன்று மாலிசந்திக்கண்மையில் சைக்கிளில் வந்த இளைஞனைத் தட்டியதால் இளைஞன் பலத்த காயங்களுடன் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிறிதுநேரத்தில் யாழ்ப்பாணம் அரசினர்ஆஸ்பத்திரிக்குஅம்புலன்ஸ்மூலம் அனுப்பி வைக்கப்பட்டான். பருத்தித்துறைப் பொலிசார் விசாரணை செய்கின்றனர், ......

## சிறுவர் பூங்கா

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம், மாநகர சபைக்கு முன்னால் அமைக்கப்பட்டிருக்கும் சிறுவர் பூங்காவை மேயர் திரு. சி. நாகராசா இம்மாதம் 30-ம் திகதி திறந்து வைப்பார்.

## தாச்சி சுற்றுப் போட்டி

அல்லைப்பிட்டி, சனி

விளையாட்டு அமைச்சின் ஆதரவுடன் தீவுப்பகுதி காரியாதிகாரி பிரிவு விளையாட்டுச் சங்கத்தினரால் திரு. எஸ். சிவகடாஷ்சத்தின் வெற்றிக் கேடயத்திற்காக நடாத்தப்பட்டுவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் வேலணை தேவி கோட்ட சனசமூக நிலைய விளையாட்டுக் கோஷ்டியினரும், வேலணை நேதாஜி சனசமூக நிலைய விளையாட்டுக் கோஷ்டியினரும் மோதிக் கொண்டனர்...

யாழ். துறைமுகத்தில் கப்பலில் நடந்தது:

# களவுபோன 50 மல்லி மூடைகள் பிடிபட்டன

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் துறைமுகத்தில நின்ற கப்பல் ஒன்றிலிருந்து களவாடப்பட்ட மல்லி மூடைகள் யாழ்ப்பாணத்திலுள்ள பல கடைகளிலிருந்தும் நேற்றுப் பகல் கைப்பற்றப்பட்டன.

பொலிசாரையே பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய இச் சம்பவம் கடந்த கிறிஸ்மஸ் தினத்தன்று நள்ளிரவு யாழ்ப்பாணம் துறைமுகத்தில் நடைபெற்றதாம்.

யாழ்ப்பாணம் சி. டபிள்யூ. ஈ. ஸ்தாபனத்திற்கு வந்திருந்த சுமார் 75 மூடை மல்லிகளே கப்பலிலிருந்து காணமல் போனவையாகும்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு இன்ஸ்பெக்டர் திரு. ஜெயசூரியா, சார்ஜன்ட் தாமோதரம் ஆகியோர் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் யாழ்ப்பாணத்திலுள்ள 3 கடைகளிலிருந்து சுமார் 50 மூடை மல்லிகளை மீட்டனர்.

யாழ்ப்பாணம் பெரிய கடை, கரையூர் ஆகிய இடங்களிலுள்ள 3 கடைகளிலிருந்தே இவைகள் கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர். புலன்விசாரணைதொடர்ந்து நடைபெறுகின்றது.

(கா. நி)

## உதயதாரகையின் 12-வது உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

மல்லாகம், சனி

வடமாகாணத்தைச் சேர்ந்த 16 கோஷ்டிகள் குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக்கழகத்தின் 12-வது வருட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கலந்துகொள்கின்றன கட்டுவன் விளையாட்டு மைதானத்தில் இச் சுற்றுப்போட்டி இம்மாதம் 30ந் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது. சாம்பியன் இறுதி ஆட்டம் தைப்பொங்கல் தினத்தன்றுஇடம் பெறும், தவ இருபோட்டிகள் நடைபெறவிருக்கின்றன. இரு பிரிவுகளிலும் சாம்பியன் கோஷ்டிகளாகத் தெரிவுசெய்யப்படும். கழகங்களுக்கு வெற்றிக்கிண்ணங்கள் பரிசாக வழங்கப்படும்.

## கி.மு.சங்கத் தலைவர் பாராட்டு

பருத்தித்துறை, சனி

''நெல்லியடிப் பட்டின சபை கலைக்கப்பட்டு விசேட ஆணையாளரின் நிருவாகத்தின் கீழ் நிர்வாகம் நடக்க ஆரம்பித்த காலத்திலேயே ஆக்கபூர்வமான பயனுள்ள சேவைகள் நடந்தேறியுள்ளன. பல காலம் கவனிப்பாரற்றுக்கிடந்த வீதிகள் மக்களுக்குப்பயன்படுகின்றன. திறமையும், ஜனநாயகமும் சேர்ந்தால் மட்டுமே நாடு முன்னேற முடியும்,'' என்று நேற்று முன்தினம் துன்னாலைப்பகுதியில் நடைபெற்ற சிரமதான சேவைகளை ஆரம்பித்து வைத்த கோவிற் கடவைக்கிராம முன்னேறச் சங்கத் தலைவர் திரு. வீ. தங்கராசா கூறினார்.

நெல்லியடிப்பட்டின சபை விசேடஆணையாளர் திரு. ஏ. ஏ. ஜோசேப், திருவாளர்கள் வீ. ஆள்வாப்பிள்ளை, உடல் நலப்போதனாசிரியர்திரு. கே. கார்த்திகேசு, ஆர் வீரவாகு ஆகியோரும் பேசினர்.

கொட்டடித்தோட்ட வீதி கலிங்கராயன் தோட்ட வீதி ஆகியன சிரமதான மூலம்...

பஞ்சாப்

## மேல் சபையை ஒழிக்க மசோதா

புதுடில்லி, டிச. 27

பஞ்சாப் மேல் சபையை ஒழிப்பதற்கான மசோதா டில்லி மேல் சபையில் ஏகமனதாக நிறைவேறியிருக்கிறது.

ஏற்கனவே இம்மசோதா டில்லி லோக்சபையில் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. ......

## தில்லையில் ஆருத்ரா தரிசனம்

சிதம்பரம், டிச. 27

இங்குள்ள நடராஜர் கோவிலில் நடைபெற்ற ஆருத்ரா தரிசனத்தில் ஒன்றரை லட்சத்திற்குமதிகமான பக்தர்கள் கலந்துகொண்டனர். மலாயா பொதுப்பணித்துறை அமைச்சர் பி. டி. சம்பந்தமும் மலாயாவிலிருந்து இவ்வுற்சவத்தைக் காண்பதற்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்த ஆசிரியையால் சகல பாடங்களும் 1-1-70ல் இருந்து கற்பிக்கப்படும். விபரங்கட்கு: 107, புலாலி வீதி, யாழ்ப்பாணம்.

1736



**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
சோ
நடித்த
**காவல் காரன்**


## விசேஷ ஆராதனை

ஊரதீவு, சனி

புங்குடுதீவு கந்தகோட்டம் சோமசுந்தரேஸ்வரப் பெருமாள் கோவில் ஊரதீவு பாணுவிடை தான்தோன்றி ஈஸ்வரன் கோயில் ஆகியவற்றில் ஆருத்திரா தரிசனத்தை முன்னிட்டு விசேட அபிசேக ஆராதனைகள் இடம் பெற்றன.


**ராணி** (யாழ்ப்பாணம்) [தினசரி 4 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
# அடிமைப்பெண்



4வது வெற்றி வாரம்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
**கிங்ஸ்லி** [கொழும்பு]
**பிளாஸா** [வெள்ளவத்தை]
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்



★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே.ஆர்.விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த
# திருவருட் செல்வர்
[ஈஸ்ட்மென் கலர்]


குளம் வாசியான ஆசை... பிள்ளை அந்தோனிப்பிள்ளை என்பவர் தமது பிள்ளைகளுக்கு ஜீவனும்சப் பணமாக ரூபா 100/- கட்டக் காசு இல்லையென்றும் ரூபா 30 மாத்திரம்தான் உண்டு என்றும் கூறியதைத் தொடர்ந்து நீதிபதி திரு. ஆர். நவரத்தினம் அவருக்கு ஒரு மாதச் சிறைத் தண்டனை விதித்தார், அவரின் இனத்தவர் இந்தத் தொகையைக் கட்டியதன் பேரில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.


**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30மணி
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
நடித்த
**கணவன்**

வல்வெட்டித்துறை
**றஞ்சனு தியேட்டர்**
தினசரி: 6-30, 9-30
போயா, பிரிபோயா 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - சாவித்திரி
நடித்த
**மகாதேவி**

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 3 காட்சிகள்
சந்திரபாபு-எம்.ஆர்.ராதா
நடித்த
**கவலையில்லாத மனிதன்**

**மனோகரா**
யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.- ஜெயலலிதா
நடித்த
**அடிமைப்பெண்**

**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நடித்த
**மகாதேவி**
(புதிய கொப்பி)

**REGAL** JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya Prepoya 4 Shows
Lee Marvin, Vera Miles
in
SERGEANT RYKER


முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவில் உதவி தபாலதிபர்களாகக் கடமையாற்றி இடமாற்றலாகிச் செல்லும் வே. பொன்னையா திரு கே. சிவபாதசுந்தரம் திரு ஒஸ்ரின் ஆகியோருக்கு முல்லைத்தீவு தபாற்கந்தோர் சிறு ஊழியர்களால் பாராட்டு வைபவம் ஒன்று நடத்தப்பட்டது. இவர்களின் சேவைமனப்பான்மை ஒத்துழைப்புப்பற்றி திருசி. மனுவேற்பிள்ளை திரு இ. ஸ்ரனிஸ்லாஸ் திரு வ. பொன்னம்பலம் ஆகியோர் எடுத்துக் கூறினர்.

...யப்படை முகா...சேர்ந்த 11 பேர் தற்காலிக வேலைநீக்கஞ் செய்யப்பட்டுள்ளனர். சமீபத்தில்இங்கு நடைபெற்ற கைகலப்புச் சம்பந்தமாகவே இவ்விதம் நடந்துள்ளதாக... தெரியவருகிறது.

வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களுள் 3 ஓவசியர்களும் அடங்குவர். குருநாகலிலுள்ள விவசாயப்படை தலைமை அலுவலகத்துக்கு இதுபற்றி விசாரணைக்குச் சென்றபோது அங்கும்இவர்கள் இம்சிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 13-ம் திகதி 28-12-69]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்-** பிதாவழிமூலம் மகிழ்ச்சி தரும் செய்தியொன்று கிடைக்கலாம் ஏழைகளிடத்தில் இரக்கம்காட்டுவீர்கள். பிறந்தகத்தின் நினைவு தலைதூக்கக் கூடும். பெரியவரின் ஆதரவு தவறுமல் கிடைக்கும்.

**ரிஷபம்-** தொழில்துறையில் புதிய உத்வேகம் காணப்படும். எந்த நிலைமையையும் கட்டுப்படுத்துவதில் தனிப்புகழ் அடைவீர்கள். வரவிலும் திருப்திகரமான நிலையைக் குறிக்கின்றது. சிறப்பான தினம்.

**மிதுனம்-** உண்மைவழி நின்று உயர்வடைவீர்கள். மேலதிகாரிகளின் நம்பிக்கை உம்மீது பதியும். எதிர்பாராத அதிஷ்ட இலாபத்துக்கும் இடமுண்டு. குடும்பத்திலும் குதூகலம் நிலவும்.

**கடகம்-** கடன்பட்டார் நெஞ்சம்போலக் கலங்கி நிற்பீர்கள். விடயங்கள் அனைத்தும் மூடுபனியாகவே இருக்கும். வணிகர்களாயின் முதலீட்டைத் மட்டுப்படுத்திக் கொள்ளவும். சிக்கல் நிறைந்த தினம்.

**சிம்மம்-** கருடப் பார்வை உங்களை வட்டமிடும். பிறரின் தலையீடு வேதனையைத் தரலாம். மோசடி ஒன்றில் உங்களை மாட்டிவைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். உஷார் நிலையில் இருப்பது விரும்பத்தக்கது.

**கன்னி-** கன்னல்மொழிபேசி காரியத்தை சாதிப்பீர்கள். கவர்ச்சிகரமான சம்பவங்களும் இடம்பெறும், குடும்பத்தில் அமைதி நிலவும். வெளியூர் நண்பர்களின் வருகை மகிழ்ச்சியைத்தரும். வரவேற்கவேண்டிய தினம்.

**துலாம்-** எதிலும் அவசரக்கோலம் தென்படும்- துரிதகதியில் செயலாற்ற முனைந்து தோல்வியை முத்தமிடலாம். சகோதரவழியால் சஞ்சலமான செய்தி கிடைக்கக் கூடும். தற்பெருமையைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**விருச்சிகம்-** பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும் உறவினர்கள் உற்சாகமான வரவேற்பைக் கொடுப்பார்கள். கல்வித்துறையில் அதிக ஈடுபாடு. ஏற்படும் இலக்கிய வட்டத்தில் சஞ்சரிப்பவர்களுக்கு இனிமையான தினம்.

**தனுசு-** எப்பக்கம் திரும்பினுலும் ஆதரவு கொடுப்பதற்கு அன்பர்கள் முன்வருவார்கள். பொதுமக்கள் மத்தியில் நல்ல மதிப்பு ஏற்படலாம். தங்கள் செல்வாக்கில் பிள்ளைகளுக்கும் பெரும்பங்கு இருக்கும்.

**மகரம்-** சூழ்ச்சிவலை விரிக்கும், மனச் சாட்சியின்படி நடந்து கொள்ளவும். மற்றவர்களை நம்பவேண்டாம். சிலர் வாழ்க்கையில் வழக்கு விவகாரத்தினுல் அதிக பணம் செலவாகும். தெய்வ நம்பிக்கை நன்று.

**கும்பம்-** கட்டிவெல்லம்போல் இனிக்கும் வாழ்க்கை. பசுமையான நினைவுகள் நெஞ்சில் அலைமோதும். இல்லறவாழ்வில் இணைப்புக்கள் இதுக்கமடையும். காதல் வசப்பட்டவர்களுக்கு கனிவான தினம்.

**மீனம்-** பணமுடையினுல் பெரிதும் வேதனைப்படுவீர்கள். கடன் தொல்லைகளும் அதிகரிக்கும். நம்பியிருந்த இடத்திலிருந்து ஏமாற்றமான செய்தி கிடைக்கலாம். மனத் தளர்ச்சிக்கு இடங்கொடாது நடந்து கொள்ளவும்.

வேலணை தேவி கோட்ட சனசமூக நிலைய விளையாட்டுக் கோஷ்டியினரும், வேலணை நேதாஜி சனசமூக நிலைய விளையாட்டுக் கோஷ்டியினரும் மோதிக் கொண்டனர்.

போட்டி முடிவில் 8-4 புள்ளிகளால் வேலணை தேவி கோட்டக் கோஷ்டியினர் நேதாஜி கோஷ்டியினரைத் தோற்கடித்தனர்.

திரு. சிவகடாஷ்சத்தின் வெற்றிக் கேடயத்திற்காக அன்று நடைபெற்ற மற்றுமோர் போட்டியில் புங்குடுதீவு பாரதி சனசமூக நிலையக் கோஷ்டியினரும், புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையக் கோஷ்டியினரும், மோதிக் கொண்டனர்.

ஆட்டம் முடிவடையும் போது 11-4 புள்ளிகளால் புங்குடுதீவுக் கோஷ்டியினர், புளியங்கூடல் கோஷ்டியினரைத் தோற்கடித்தனர்.

வேலணைவங்களாவடி முருகன் ஆலய முன்றலில் நடைபெற்ற இப் போட்டிக்கு உடற்பயிற்சிப் போதனுசிரியர் திரு. நடராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## திருவாசகப் போட்டியில் பரிசுபெறுவோர்

சுன்னுகம், சனி

ஏழாலை வடக்கு ஆலங்கட்டை விக்னேஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையார் திருவெம்பாவைபூஜையைத் திறம்பட நடத்தியதோடு இறுதிநாளன்று திருவாசகப் போட்டியையும் நடாத்தினர். ஏராளமானேர் கலந்து கொண்ட இப்போட்டியில் பரிசுபெற்ருேர் விபரம் வருமாறு:-

மேற்பிரிவு:- செல்விகள் பு. விமலாம்பிகைதேவி, ம. வசந்தமலர், சு. திருவருட்செல்வமலர்.

மத்தியபிரிவு: செல்விகள் சு. ஜீவசோதி, சி. செல்வரஞ்சினி, செல்வன் சு. மனோகரன்.

கீழ்ப்பிரிவு: செல்வன் த. கருணுகரன், செல்விகள் சோ. பவானி, ந. தேவிகா, ச. யோகராணி.

பாலர்பிரிவு: செல்வனகள் வை. இன்பநாதன், மோகனதாஸ், செல்வி சு. செல்வராணி.

சபைத்தலைவர் திரு. தெ. கந்தையா பரிசுகளை வழங்கினுர்: மத்தியஸ்தர்களாக திருவாளாகள் சி. நடராசா, சி. தம்பிராசா, திருமதிகள் வள்ளியம்மை, சந்திரகாந்தி ஆகியோர் கடமையாற்றினர்.

நலப்போதனுசிரியர் திரு. கே. கார்த்திகேசு, ஆர் வீரவாகு ஆகியோரும் பேசினர்.

கொட்டடித்தோட்ட வீதி கலிங்கராயன் தோட்ட வீதி ஆகியன சிரமதான மூலம் திருத்தப்பட்டன. சிரமதானத்திலீடுபட்ட வாலிபர்களுக்குத் திரு. தங்கராசா சிற்றுண்டியளித்துப் பாராட்டினுர்.

திரு. ஏ சண்முகம் நன்றி கூறினுர்.

## பயன்படவில்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு

எழுதுமட்டுவாள் உபதபால் நிலையத்தில் தந்தித் தொடர்பை உண்டாக்கித் தரும்படி தபால் மா அதிபரை பன்முறை கேட்டதின்படி சென்ற ஆண்டு பூரணப்படுத்தியும் மக்களுக்கும் இதுவரை பயன்படவில்லை காரணம் தந்தி விநியோகமில்லை.

இதை பூர்த்தி செய்யும் வண்ணம் இவ்வூர் மக்களால் கைச்சாத்திட்ட மகஜர் ஒன்றை வடபகுதிசுப்பிரிண்டனுக்கு அனுப்பும் பணியில் சனசமூக நிலையத்தலைவர் ஈடுபட்டுள்ளரா.

## இடைக்கால தடை

மதுரை, டிச. 27

மூலஸ்தானத்திற்குள் சென்று விக்கிரகத்தைத் தொட்டு வணங்குவதைத் தடைசெய்யும் இடைக்கால உத்தரவை, சிவகெங்கை பிரதம மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

மூலஸ்தானத்திற்குள் பிரவேசித்து, விக்கிரகத்தைத் தொட்டு வணங்க குன்றக்குடி அடிகளார் கொடுத்த அனுமதியை எதிர்த்து 3 பக்தர்கள் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இம்மனு பற்றிய விசாரணை முடிவடையும்வரை எவரும் மூலஸ்தானத்திற்குள் செல்லலாகாது என்று நீதிபதி உத்தரவிட்டுள்ளார்

## அபாய நிலை

மன்னுர், சனி

கடந்த ஐந்து தினங்களாக பெய்துவரும் பெருமழை காரணமாக மன்னுர் கட்டுக்கரைக்குளம் உடைப்பெடுக்கும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

சென்ற ஆண்டு பல லட்ச ரூபா செலவில் விஸ்தரித்துப் புதுப்பிக்கப்பட்ட மன்னுர் கட்டுக்கரைக் குளம், தற்போது நீர் தேங்கி வழியும் நிலையிலுள்ளது. நீர்மட்டம் பத்தரை அடிக்கும் மேலாகிவிட்டதால் எந்த நேரமும் குளத்தின் புதுக்கட்டு உடைப்பெடுக்கலாமென அஞ்சப்படுகிறது.

...கொண்டனர். மலாயா பொதுப்பணித்துறை அமைச்சர் பி. டி. சம்பந்தமும் மலாயாவிலிருந்து இவ்வுற்சவத்தைக் காண்பதற்காக வந்திருந்தார். அன்று காலை நடராஜப் பெருமானுக்கு ஆயிரங்கால் மண்டபத்தில் அபிஷேகமும் நடைபெற்றது.

## வயல்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவிலும், அயற்கிராமங்களிலும் பெய்துவரும் கடும் மழை காரணமாக ஏறக்குறைய இப்பகுதியிலுள்ள மூன்றிலிரண்டு பங்கு வயல்கள் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கடல் சீர் சரியில்லாததால் மீனவர்கள் தொழிலுக்கு செல்லவில்லை. தொடர்ந்து மழை பெய்வதுடன் காற்றுமடிப்பதால் இப்பகுதியில் மேலும் சேதமேற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## இலங்கைத் திரைப்படங்களில் விருப்பு

கோட்டை, சனி

நெதர்லாந்தும் ஆஸ்திரேலியாவும் இலங்கையில் உற்பத்தியாகும் திரைப்படங்களை விரும்புகின்றன. இவ்விருநாடுகளும் இத்திரைப்படங்களில் ஆர்வங்கொண்டு அவற்றை வியாபார நோக்கோடு தம்நாடு முழுவதும் காட்டுவதற்கு விரும்புவதாகத்தெரிகிறது.

## மோதும்

பருத்தித்துறை, சனி

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டக்கோஷடி, வடமராட்சி தெரிவுக் கோஷ்டியுடன் நாளை வதிரி டயமன்ஸ் மைதானத்தில்மோதவிருக்கிறது.

எஸ். இரத்தினசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றுவார்.

## தெட்சணுமூர்த்தி

சென்னை, டிச 26

தியாகராயநகர் ஸ்ரீ கிருஷ்ண கானசபா இசைவிழா நிகழ்ச்சியில் வரும் 29-ம் திகதி யாழ்ப்பாணம் தவில்வித்துவான் திரு. தெட்சணுமூர்த்தி, நாதஸ்வரவித்துவான் ஷேக் சின்ன மௌலானு சாகிப்புக்கு தவில்வாசிக்கிருர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபுக்குடியரசு, சூடான், லிபியா ராணுவக்கூட்டு உருவாகும்

## திரிபோலியில் அதிபர்கள் ஆலோசனை

கெய்ரோ, டிசம்பர் 27

ஐக்கிய அரபுக்குடியரசு லிபியா, சூடான் ஆகிய மூன்று நாடுகளும் பொருளாதார, அரசியல், ராணுவ கூட்டமைப்பொன்றை ஏற்படுத்திக்கொள்ள முடிவுசெய்துள்ளன.

இத்தகவல் நேற்று லிபியா தலைநகரான திரிபோலியில் வெளியிடப்பட்டது. இந்த மூன்று நாடுகளின் அதிபர்களும் கூடி ஆலோசித்த பின்னர் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

இஸ்ரேலுக்கு எதிராக இந்தக்கூட்டு அமைப்பு தனது வசதிகளை ஒருமுகப் படுத்தும் என்று கருதப்படுகின்றது.

நேற்று திரிபோலியில் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் ஐக்கிய அரபுக்குடியரசு அதிபர் நாஸர் பேசுகையில், இஸ்ரேலியரால் பலவந்தமாகப் பிடிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களை விடுவிப்பதில் தாம் உறுதிகொண்டிருப்பதாகக் கூறினார். சலுகைகளுக்காக அரபுப் பகுதிகளை விட்டுக் கொடுக்கத்தயாராயில்லை என்றார் நாஸர். அரபுக்கள் தோல்வியை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள், இறுதிவரை போராடிவிடுபட்ட பகுதிகளை மீட்டே தீருவோம் என்று அதிபர் நாஸர் அறைகூவினார்.

அமெரிக்கா சமீபத்தில் தெரிவித்த சமரச யோசனைகளை நாஸர் நிராகரித்தார். அமெரிக்காதான் இஸ்ரேல் பிடித்துக்கொண்டுள்ள பகுதிகளை விட்டுக் கொடுக்காமலிருக்க ஊர்க்கமளிக்கிறது என்று அவர் குற்றஞ்சாட்டினார்

### டான்சானியாவில் நாசவேலை

சாம்பியாவையும் டான்சானியாவையும் இணைக்கும் பாலமொன்றைத் தகர்த்து விடுவதற்கு நேற்று நடைபெற்ற நாசவேலை முயற்சி முறியடிக்கப்பட்டது. டான்சானியாவிலுள்ள இந்தப் பாலத்தின் வழியாக சாம்பியாவுக்கு எண்ணெய் கொண்டுபோகும் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பாலத்தின் அருகில் நாசவேலையில் ஈடுபடவிருந்த ஒருவரை காவலர் ஒருவர் கண்டுபிடித்தார். காவலரைக் கண்டதும் ஆசாமி டைனமைட்டுகளைப் போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தாராம்.

# காங்கிரஸ்பொருளாதாரத்திட்டம்: காரியக்கமிட்டி ஏற்றது

பம்பாய், டிச. 27

இந்தியாவில் பொது இன்சூரன்ஸ் துறையைத் தேசியமயமாக்க வேண்டுமென்றும் ராஜமான்யங்களை ஒழித்துவிடவேண்டுமென்றும் அரசாங்கங்களை கேட்டுக்கொள்ளும் பொருளாதாரத் திட்டமொன்றை பம்பாயில் கூடியுள்ள அகில இந்திய காங்கிரஸ் கட்சி காரியக் கமிட்டி உருவாக்கியுள்ளது.

காரியக்கமிட்டி பொருளா...மையாக்கப்பட்ட வங்கிகள் முன்நிற்கவேண்டும் என்று வற்புறுத்தும் அம்சமும் பொருளாதார திட்டத்தில் இடம்பெற்றிருக்கின்றது.

காரியக்கமிட்டி இன்று அதிகாலைவரையில் ஆலோசனைகள் நடத்தியபின்னர் கலைந்தது.

நேற்று மாதர்கள் கூட்டமொன்றில் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி பேசுகையில் வறுமையை ஒழிக்க

தமிழகத்தில்

## பயங்கர கம்யூனிஸ்டுகள் நடமாட்டம்

கோழிக்கோடு, டிச. 27

கண்ணனூர் மாவட்டத்திலுள்ள தலபல்லா என்ற கிராமத்திலுள்ள ஒரு வீட்டைப் பொலிசார் திடீர் சோதனையிட்ட பொழுது

## இசைவிழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

சென்னை, டிச. 28

சென்னையில் நடைபெறும் இசைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்:

இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சங்கத்தின் ஆதரவின்கீழ் வாணிமகால் மண்டபத்தில் 6-00மணி: சிவாஜி நாடக மன்றத்தினரின் பத்மஸ்ரீ சிவாஜி கணேசன் நடிக்கும் 'வியட்நாம் வீடு' நாடகம். கதை: கே.சுந்தரம், டைரக்ஷன்: எஸ். ஏ. கண்ணன்.

மியூசிக் அக்கடமி சார்பில் அக்கடமி மண்டபத்தில் பி. ப. 1-30: தேவகி ரங்கப்பா பாட்டு, காஞ்சி ஜனார்த்தனம் வயலின், நாகை சுந்தரராஜன் மிருதங்கம்.

பி. ப. 3-00: டி. கே. ஜெயராமன் பாட்டு, எம். சந்திரசேகரன் வயலின், காரைக்குடி மணி மிருதங்கம்.

பி. ப. 5-30: ஸ்ரீமதி ரி. பாலசரஸ்வதி பரதநாட்டியம்.

இரவு 8-30: எம். ஆர். கௌதம் இந்துஸ்தானி பாட்டு. (இமை. நிரு)

## அனலைதீவு செய்திகள்

-நமதுநிருபர் மு.சிவஞானம்-

### நெசவுநிலையத் திறப்புவிழா

அனலைதீவில் புதிதாக அமைக்கப்பட்ட நெசவுநிலையக் கட்டடவேலை பூர்த்தியாகும் நிலையில் உள்ளது. அனலைதீவு கிராமமுன்னேற்றச் சங்கத்தினரால் திருத்தப்படும் இக்கட்டிடத்திற்கான 1000 ரூபா பெறுமதி[illegible] ஓடுகளை வழக்கறிஞர் ப. கதிரவேலு இலவசமாக வழங்குகிறார். அனலைதீவுமாதர்கிராமமுன்னேற்றச்சங்கத்தினரின் உதவியும் இதற்கு வழங்கப்பட்டது. திறப்புவிழா விரைவில் நடைபெறு...

## மன்னர்களின் மான்யம் ஒழிக்கப்படும்

புதுடில்லி, டிச. 27

முன்னாள் மன்னர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் மானியங்களையும் சலுகைகளையும் ஒழித்துவிடுவதற்கு ஆட்சிமன்றத்தின் அடுத்த வரவு செலவுத்திட்டக் கூட்டத்தொடரில் சட்டம் கொண்டுவரப்படும், இத்தகவலை மன்னர்களிடமே உள்துறை அமைச்சர் திரு. சவான் விளக்கிக் கூறியிருக்கிறார். இதுபற்றி முன்னாள் மன்னர்களுடன் விவாதிப்பதற்காக அவர்களை அடுத்தமாதம் 8-ம் திகதி சந்திப்பதற்கு திரு. சவான் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

— —

## "கிராமத்தின் பொருளாதாரம்"

கோப்பாய், சனி

"ஒரு கிராமத்தின் பொருளாதார வளர்ச்சி, கிராமத்தின் முன்னேற்றம் அக்கிராம மக்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. கிராமமக்கள் அனைவரும் ஒற்றுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் ஒன்றுபட்டு இத்தகைய ஸ்தாபனங்கள் மூலமாக கிராமத்தை சகல துறைகளிலும் பெறச்செய்த லவசியம்."

இவ்வாறு கோப்பாய் வடக்கு வள்ளி நாயகியம்மன் சன சமூக நிலையத்தாரால் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புவைபவத்துக்கு நன்றி தெரிவித்துப்பேசும் போது கோப்பாய் கி. ச. தலைவர் திரு. தி. பரமானந்தராசா கூறினார்.

திரு. செமியோன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, கோப்பாய் கி. ச. அங்கத்தவர்கள் [illegible]ட பலர் பேசினர்.

நிலையத்தலைவர் திரு. எஸ். நல்லையா நன்றி கூறினார்.

— —

## வைத்திய விரிவுரையாள...

## பாத்திரங்களையும் எடுத்துச் சென்றனராம்

ஜபல்பூர்; டிச. 27

சின்டிக்கேட் காங்கிரசார் இங்குள்ள ரயில் நிலைய ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு காசு கொடுக்காததுடன் சாப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட எவர்சில்வர் பாத்திரங்களையும் திருடிச் சென்றுவிட்டார்களாம்

ஆமதாபாத்தில் நடந்த சின்டிக்கேட் மகாநாட்டிற்குச் சென்றுவிட்டு தனி ரயிலில் திரும்பிக்கொண்டிருந்த இவர்களுக்காக மேலிட உத்தரவின்படி இந்த ஹோட்டலில் ஏராளமான சைவ-அசைவ உணவுகள் தயாரிக்கப்பட்டிருந்தனவாம். இவைகளைச் சாப்பிட்டதோடு 'நிறுத்தாமல் சாப்பிட்ட பாத்திரங்களையும் தூக்கிச் சென்ற இவர்கள் ரயில் புறப்படும் பொழுது நிஜலிங்கப்பா வாழ்க' 'டி. பி. மிஸ்ரா, இந்திரா ஆதரவாளர்கள் ஒழிக' என்று கோஷமிட்டனராம்.

இதுசம்பந்தமாக ஜபல்பூர் ரயில் நிலைய அதிகாரிகள் ரயில்வே இலாகாவுக்குப் புகார் செய்துள்ளனர்.

## பெற்றோர் ஆசிரிய சங்கக்கூட்டம்

கோப்பாய், சனி

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டமொன்று அண்மையில் பேற்படி பாடசாலை மண்டபத்தில் தலைமை ஆசிரியர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றபோது மேற்படிபாடசாலை கட்டிட வசதிக் குறைவு, தளபாடக் குறைவு குடிநீர்க்கஷ்டம், கத்தோலிக்க உதவி ஆசிரியர் பற்றாக் குறை முதலியன வற்றைத் தெரிவிக்கும் தீர்மானமொன்றினை ஏக மனதாக நிறைவேற்றியுள்ளனர்.

இத் தீர்மானங்கள் அடங்கிய மகஜரின் பிரதிகள் கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, வட மாநில வித்தியாதிபதி திரு எஸ். தணிகாசலம் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

## குப்பிழான் உப தபால் நிலைய திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

உடுவில் தொகுதியிலுள்ள புதிய உபதபால் நிலையத்தை நாளை மாலை 4.30 மணிக்கு வட பெரும் பாக தபால் அதிகாரி திரு. ரி. தர்மலிங்கம் திறந்துவைப்பார் இவ்விழவில் பிரதம விருந்தினராக உடுவில் எம் பி. திரு. வி. தர்மலிங்கம் கலந்துகொள்வார். புதிய உப தபாலதிபராகப் பொறுப்பேற்கும் திருமதி கமலாதேவி நடனசிகாமணியிடம் முதல் முத்திரையை உடுவில் எம். பி. பெற்று அஞ்சல் விநியோகத்தை ஆரம்பித்து வைப்பார். வலி வடக்கு காரியாதிகாரி திரு. எல். பற்றிக், ஏழாலை கிராம சபைத் தலைவர் திரு. க. சிவகுரு ஆகியோர் உரை நிகழ்த்துவர். டாக்டர் சி. செல்வநாயகம் தலைமைவகிப்பார்.

## கோணேஸ்வரத்தில் மலலசேகரா

திருகோணமலை, சனி

கோணேஸ்வரரைத் தரிசிப்பதற்கு டாக்டர் மலலசேகரா, திரு. அமரசூரியா, முன்னாள் இங்கிலாந்து ஸ்தானிகர் திரு. ஆர். எஸ். எஸ். குணவர்தன ஆகியோரும் 300 மேற்பட்ட பௌத்த குருமார்களும், வந்தனர்.

திரு. மலலசேகராவை கோணேஸ்வரப் பரிபாலன சபைத்தலைவர் டாக்டர் கே. எஸ். எஸ். சித்திரவேலு அவர்கள் மலர்மாலை சூட்டி வரவேற்றார். விஷேச பூஜையோடு இவர்களுடைய தரிசனம் நடைபெற்றது. ......

## 68 கிராம வங்கிகள்

அம்பாந்தோட்டை, சனி

கிராமங்களிலுள்ள விவசாயிகளின் நலனை முன்னிட்டு மக்கள்வங்கி 68 கிராம வங்கிகளை திறந்து வைத்துள்ளது.

கிராமங்களின் முன்னேற்றத்தின் பொருட்டு மேலும் இத்தகைய பல கிளைகளைத் திறந்து வைக்க மக்கள் வங்கி தீர்மானித்துள்ளதாக மக்கள் வங்கியின் உதவி அதிபர் திரு ரஞ்சித் டி. லிபெரா தெரிவித்துள்ளார்.

— —

## கதம்பவிழா

ஊரதீவு, சனி

ஊரதீவு இளந்தமிழர் மன்றத்தில் சங்கிலியன் போதனா நிலைய மாணவரின் கதம்பவிழா நடைபெற்றது. திருவள்ளுவர் பாலர் கழகத்தினரின் இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்...

## திருப்பதியில் ஏ.பி.நாகராஜன்

திருப்பதி, டிச. 27

ஜனாதிபதியின்பரிசுபெற்ற தில்லானா மோகனாம்பாளையும் மற்றும் 'வா ராஜா வா' போன்றபடங்களையும் டைரக்கட் செய்த திரு. ஏ பி. நாகராஜன் தனது குடும்பத்துடன் இங்குள்ள எழுமலையான் கோவிலுக்குவந்து வழிபட்டதோடு ரூபா 550 செலவில் கல்யாண உற்சவமும் நடத்தி இருக்கிறார்.

இன்னும் சினிமாநடிகை தேவிகாவும் தனது கணவருடன் இக்கோவிலுக்கு வந்திருந்தார் ......

## பஜனை விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

திருவாதிரை அன்று வடமாநில பஜனைச் சம்மேளனத்தினால் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நடத்தப்பட்ட பஜனை விழாவில் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் சுமார் பத்திற்கு மேற்பட்ட பஜனைச்சபைகள் கலந்து கொண்டன. காலை 7 மணிக்கு தலைவர் உரையுடன் விழா ஆரம்பித்தது. பஜனை விழாவில் கலந்து கொண்ட சபைகளை மேற்படி சம்மேளனம் பாராட்டிக் கௌரவித்தது. பகல் 12 மணிக்கு விழா முடிவுற்றது. செயலாளர் நன்றி கூறினார். விழாவில் பங்கு கொண்ட சபைகளுக்குகடித மூலம் நன்றி தெரிவிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. —

## நூல் வெளியீடு

சுழிபுரம், சனி

சுழிபுரம் யோகி கா. கார்த்திகேசுவால் உரை எழுதப்பட்டு கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை இந்து மாமன்றத்தால் வெளியீடு செய்யப்படவிருக்கும் கந்த புராண யுத்தகாண்ட உரை நூல் மிகவிரைவில் வெளியாகவிருக்கிறது.

கலாசாலை அதிபர் திரு. எஸ். விசுவலிங்கம் நூல் வெளியாவதற்கான சகல பொறுப்புக்களையும் ஏற்றுள்ளார். ......

## பதவி உயர்வுடன் பயிற்சி

சுழிபுரம், சனி

சுழிபுரம் தபாற் கந்தோரில் கடமையாற்றும் திரு. சி. சேனாதிராசா அடுத்த மாதம் முதல் பதவிஉயர்வுடன் ஆறு மாதப் ப[illegible] பெறுவதற்காக [illegible]புக்கு இடமாற்றம் செ[illegible]பட்டுள்ளார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த இவர் ஒரு ஆண்டு திருக்...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சா ங் க ங் க ளை கேட்டுக் கொள்ளும் பொருளாதாரத் திட்டமொன்றை பம்பாயில் கூடியுள்ள அகில இந்திய காங்கிரஸ் கட்சி காரியக் கமிட்டி உருவாக்கியுள்ளது.

காரியக்கமிட்டி பொருளாதாரத்திட்டத்தை ஏற்றுக் கொண்ட போதிலும், அரசியல் சம்பந்தமான தீர்மானம் குறித்து எதுவித முடிவும் எடுக்கவில்லை. அரசியல் நிலைமை குறித்து ஆராய்வதற்கு ஒரு சிறு குழு நியமிக்கப்பட்டது.

மத்தியதர மற்றும கஷ்டமுறும்விவசாயிகளுக்கு வசதிகள் அளிப்பதில் தேச உட அதிகாலைவரையில் ஆலோசனைகள் நடத்தியபின்னர் கலைந்தது.

நேற்று மாதர்கள் கூட்டமொன்றில் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி பேசுகையில் வறுமையை ஒழிக்க மாதர்கள் முன்னின்று உழைக்கவேண்டும் என்றார். சுதந்திரப்போராட்டத்தில்பெண்கள் முன்னின்று போராடியதைப்பிரதமர் நினைவுகூர்ந்து அதுபோலவே நாட்டில் வறுமையைஒழிக்க முன்வர வேண்டும் என்றார். ஏழைகள் சேமித்துப்பழகுவதற்கு பெண்கள் போதிக்கவேண்டும் என்றார் பிரதமர்.

# 50 லட்சம் பெண்களுக்கு குடும்பக்கட்டுப்பாடு வசதி

## அமெரிக்க அரசு நடவடிக்கை

வாஷிங்டன், டிச. 27

ஏறத்தாழ 50 லட்சம் அமெரிக்கப் பெண்களுக்குக் குடும்பக் கட்டுப்பாட்டுப் பணிகள் கிடைக்குமாறு செய்வதில் அமெரிக்க அரசாங்கம் முனைந்துள்ளது. இவர்கள் இவ்வகைப் பணிகளுக்காகப் பணம் செலவிடக்கூடிய நிலையில் இல்லாதவர்கள்.

குடும்பம் பெருகாமல் மட்டுப்படுத்துவதெப்படி என்ற விபரங்களைத் திரட்டவும், விரும்பும் ஏழைகளுக்கு அவை கிடைக்குமாறு செய்யவும் நாடு முழுமைக்குமாகக் குடும்பக்கட்டுப்பாட்டுத் தலைமையகம் ஒன்று நிறுவப்படும்.

தலைமையகம் வாஷிங்டன் நகரில் இருக்கும். உடல், நலம், கல்வி, நல்வாழ்வுத் துறைக்கு அமெரிக்காவில் ஆங்காங்கு ஒன்பது வட்டார அலுவலகங்கள் உண்டு. அவற்றில் நியமிக்கப்பெறும் குடும்பக்கட்டுப்பாட்டுப் பிரதிநிதிகள் வழியாகத் தலைமையகம் செயல் புரியும்.

'பணம் செலவிட முடியாத நிலையிலுள்ள விரும்புவோர் அனைவருக்கும்' அடுத்த ஐந்தாண்டுகளில் மத்திய அரசின் குடும்பக்கட்டுப்பாட்டுப் பணிகள் நல்ல முறையில் கிடைக்குமாறு செய்ய வேண்டும் என்று அதிபர் நிக்ஸன் சென்ற ஜூலை மாதம் கூறினார்.

சட்டமன்றத்துக்கு அனுப்பிய செய்தி ஒன்றில் ஐம்பது ஆண்டுகளில் அமெரிக்க மக்கள் தொகை 10 கோடியிலிருந்து 20 கோடியாக உயர்ந்துள்ளது என்றும் இன்னும் முப்பதே ஆண்டுகளில் அது 30 கோடியாக வளர்ந்துவிடுமென்று தோன்றுவதாகவும் அதிபர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மக்கள் தொகைப் பெருக்கம் உலகளாவிய ஒரு சிக்கல் என்றும் ஐ. நா. மன்றம் அதன் கிளைகள், தனிப்பட்ட அரசுகள் முதலியன மேற்கொள்ளும் குடும்பக் கட்டுப்பாட்டு முயற்சிகளுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளித்து வரும் என்றும் அவர் அதே செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கிடையில் வறுமை ஒழிப்பு அமெரிக்க அரசு நிலையமான பொருளாதார வாய்ப்பு அலுவலகம் (ஓ.இ.ஓ.) இத்துறையில் தனதுபணிகளை அரைமடங்கு அதிகப்படுத்த முடியுமென நம்புவதாகத் தெரிவித்துள்ளது-

## சர்வதேச சிறுவர் சித்திரக் கண்காட்சி

மாஸ்கோ, டிச. 27

55 நாடுகளிலிருந்து வந்த சிறுவர் சித்திரங்களைக் கொண்டு பெரிய சர்வதேச கண்காட்சி ஒன்று சோவியத் கலைப் பேரவை மண்டபத்தில் டிசம்பர் 25-ம் திகதி ஆரம்பமாகியது.

பல சோவியத் ஸ்தாபனங்கள் ஏற்பாடு செய்த இந்தக் கண்காட்சிக்கு 120ஆயிரம் ஓவியங்கள் வந்தன. இவற்றுள் காட்சிக்குவைப்பதற்குச் சிறந்தவற்றைத் தெரிவுசெய்ய சர்வதேச நடுவர் குழுவுக்கு இரண்டு மாதங்கள் பிடித்தது.

ஓவியங்கள் நகரக்காட்சிகளையும், கார்ணிவல்களையும். பெற்றோரின் தொழில்களையும் சித்தரிக்கின்றன.

சிறுவர் சித்திர சர்வதேச கண்காட்சி மாஸ்கோவில் நடைபெறுவது இது இரண்டாவது தடவையாகும் தற்போதைய கண்காட்சி லெனின் நூற்றாண்டு ஜனன விழாவுக்குச் சமர்ப்பணமாக்கப்பட்டுள்ளது.

## நடமாட்டம்

கோழிக்கோடு, டிச. 27

கண்ணனூர் மாவட்டத்திலுள்ள தலபல்லா என்ற கிராமத்திலுள்ள ஒரு வீட்டைப் பொலிசார் திடீர் சோதனையிட்டபொழுது துப்பாக்கிகள் வெடிகுண்டுகள், ஈட்டிகள், குத்துக்கத்திகள் மற்றும் மரத்தடி, மிளகாய்ப்பொடி ஆகியன சிக்கின.

இதுசம்பந்தமாக 31 இடதுசாரி கம்யூனிஸ்டுகள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடம் ஜனவரி 12-ம் திகதி ஆதூர் பொலிஸ் நிலையத்தைத் தாக்குவதற்கான திட்டமிருந்ததாகக் கூறப்படுகின்றது.

இன்னும் நீலேசுவரம் என்னும் கிராமத்தில் சிவப்புச் சட்டையணிந்த 50 தீவிர கம்யூனிஸ்டுகள் நுழைந்ததாகவும் கிராமவாசிகள் அவர்களை எதிர்க்கவே அருகிலுள்ள காட்டுக்குள் ஓடிச் சென்றுவிட்டதாகவும் தார் மாவட்டம் என்ற ஊரில் உள்ள ஒரு வீட்டில் 30 கம்யூனிஸ்டுகளுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டுவருவதாகவும் தகவல் கிடைத்துள்ளன.

## நிக்ஸன் தோற்றிருப்பார் ஜோன்ஸன் சொல்கிறார்

நியூயோர்க், டிச. 27

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தாம் போட்டியிட்டிருந்தால் நிச்சயமாக திரு. நிக்ஸனைத் தோற்கடித்திருக்கமுடியும் என்று நம்புவதாக முன்னாள் ஜனாதிபதி திரு. ஜோன்ஸன் கூறியுள்ளார்,

டெலிவிஷன் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்ட திரு. ஜோன்ஸன் ஜனாதிபதி கென்னடி சுடப்பட்டது முதல் தேர்தலில் போட்டியிடக்கூடாது என்று முடிவு செய்திருந்ததாகக் குறிப்பிட்டார்.

## 5-ம் திகதிக்கு ஒத்திவைப்பு

மன்னார், சனி

தாராக்குண்டு நூருதீன் கொலை வழக்கு விசாரணை மன்னார் நீதிமன்றத்தில் பதில் நீதிபதி திரு. ஆர். நவரத்தினம் முன்னியில் நடைபெற்றபோது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருந்த எருக்கலம்பிட்டி வாசியான ஜலால்தீன் தான்குற்றவாளி அல்லவென்று கூறியதால் மேல் விசாரணையை நீதிபதி 5-ம் திகதிவரை ஒத்திவைத்தார்

...ஒடுகளை வழங்குகிறார் ப. கதிரவேறு இலவசமாக வழங்குகிறார். அனலைதீவு மாதர்கிராமமுன்னேற்றச்சங்கத்தினரின் உதவியும் இதற்கு வழங்கப்பட்டது. திறப்பு விழா விரைவில் நடைபெறுமென கி.மு. ச. செயலாளர் திரு.சு. தயாபரராசா தெரிவித்தார்.

0 0 0

### மாணவர்களுக்கு பயிற்சி

அனலைதீவு மாதர் கிராம முன்னேற்றச்சங்கத்தைசேர்ந்த 4 மாணவிகளுக்கு அச்சுவேலி கிராமமுன்னேற்றப் பயிற்சிக்கழகத்தில் பயிற்சி பெறுவதற்கான அனுமதியை சமூகசேவைப்பகுதி வழங்கியுள்ளது. வீட்டுப்பணி, தையல், உணவுபதார்த்தம் தயாரித்தல் போன்ற பல வகைப் பயிற்சிகளை இவர்கள் பெறுவரென மேற்படி மன்றத் தலைவி திருமதி விமலாதேவி துரைராசா சொன்னார்.

0 0 0

### படகு சேவை சீர்கேடு

ஊர்காவற்றுறை, ஏழுவைதீவு, நயினாதீவு படகுசேவை கடந்தபல நாட்களாக சீர்கேடான நிலையில் இயங்கி வருகிறது. மோட்டார்வள்ள ஐக்கிய சங்கத்தினருக்குச் சொந்தமான ஒருபடகு மட்டுமேஇப்பகுதிதபால்சேவையில் ஈடுபட்டுள்ளது'

தனியார் 'லோஞ்' ஒன்றுமட்டுமே இப்பகுதிப்போக்குவரத்துக்கஷ்டத்தை நீக்கிவருகிறது. இதுசம்பந்தமாக உடனடி நடவடிக்கை எடுக்கும்படி அனலைதீவு கிராமசபைத்தலைவர் திரு.ஐ. சபாபதிப்பிள்ளை அரசாங்க அதிபருக்கும், தீவுப்பகுதி எம். பிக்கும் தந்திமூலம் கேட்டுள்ளார்.

0 0 0

### பதிவுகாரர் வேண்டும்

எழுவைதீவுப் பகுதிக்கு பிறப்பு-இறப்பு பதிவுகாரர் பலமாதங்களாக நியமிக்கப்படாததால் இப்பகுதிமக்கள் பெரும் கஷ்டமுறவேண்டியுள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் இதற்கான நேர்முகப்பரீட்சை நடைபெற்றபோதிலும் இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை.

0 0 0

### நிலுவை செலுத்தவில்லையாம்

தீவுப்பகுதி படகுச்சேவையை நடாத்திவரும்தீவுப்பகுதி மோட்டார் வள்ள ஐக்கிய சங்கத்தினர் யாழ்ப்பாணம் கூட்டுறவு வங்கிக்குச் செலுத்தவேண்டிய பெருந்தொகையானபணத்தைஇதுவரை செலுத்தவில்லையென கூட்டுறவு இலாகாவைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார். இச் சேவையைக் காரியாதிகாரியிடம் ஒப்படைக்கும்படி கூட்டுறவுப்பகுதி மேலிடத்துக்குச் சிபார்சு செய்துள்ளதாகவும் தெரியவருகிறது.

0 0 0

அனலைதீவில் இம்முறை நெல் நன்றாகவிளைந்துள்ளது தீவுப்பகுதியில் ஏனைய இடங்களைவிட இங்கு நல்ல நெல் காணப்படுகிறது.

பட பலர் பேசினர்.

நிலையத்தலைவர் திரு.எஸ். நல்லையா நன்றி கூறினார்.

## வைத்திய விரிவுரையாளர்

கோட்டை, சனி

தற்போது மேற்கிந்திய தீவுகளின் பல்கலைக் கழகமொன்றில் வைத்திய விரிவுரையாளராகக் கடமையாற்றும் இலங்கை வைத்திய நிபுணர் டாக்டர் ஜோன் சென்ற் ஜோர்ஜ் சமீபத்தில் இலங்கைக்குவந்துள்ளார். இலங்கைக்குவரும்பொழுது இந்தியாவிலும் தங்கிநின்று அங்கு நடைபெற்ற வைத்திய மகாநாடொன்றில்உரைநிகழ்த்தியுள்ளார்.

டாக்டர் ஜோன் சென்ற் ஜோர்ஜ் இலங்கையில் 15 வருடம் சேவை செய்தபின்னர் ஒய்வுபெற்று நைஜீரியாவுக்குச் சென்று அங்கு வைத்தியராகக் கடமையாற்றினார். இருவருடங்களுக்கு முன்னர் மேற்கத்திய தீவுகளின் பல்கலைக் கழகமொன்றின் விரிவுரையாளராக நியமனம் பெற்றுள்ளார். வைத்தியத்துறையில் ஆராய்ச்சி செய்து பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி உலக சஞ்சிகைகளில் வெளியிட்டுள்ளார். ஐககிய அமெரிக்காவுக்கும் சென்று அங்குள்ள பல்கலைக் கழகங்கள் பலவற்றில் வைத்திய விரிவுரைகள் நிகழ்த்தியுள்ளார்.

## விசாரணை ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, சனி

புதுக்குடியிருப்பு வாசியான சுப்பிரமணியம்-சிவானந்தம் என்பவர் புதுக்குடியிருப்பு கிராமசேவையாளரான திரு. கா. தம்பாபிள்ளையைத் தகாத வார்த்தைகளால் பேசினரென முல்லைத்தீவுப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு நீதிபதி முன்பு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி சுற்றவாளியெனக் கூறியதால் நீதிபதி மேல்விசாரணையை ஒத்திவைத்தார்

கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, வட மாநில வித்தியாதிபதி திரு எஸ். தணிகாசலம் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

## திருமலைச் செய்திகள்

### இந்து வாலிபர் சங்கம்

திருக்கோணமலை, சனி

திருமலை இந்து வாலிபர் சங்கத்தின் வருடாந்தப் கூட்டம் ஜனவரி 1-ம் திகதி இந்துவாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

0 0

### பிணையில் சென்றனர்

வேலை நிறுத்தம் செய்யாத துறைமுக ஊழியர்களைத் தாக்கியதாக திருமலைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்ட மூவரைத் தலா 500 ரூபா பிணையில் செல்ல திருமலை மாஜிஸ்திரேட் அனுமதித்தார்.

0 0

### அபராதம் பெற்றார்

திருமலை நகரசபைக்கு உடமையான 3-10 ரூபாவுக்குப் பெறுமதியான மின்சார பல்புக்களை வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி திருமலைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் தேனீர் கடை ஒன்றினைச் சேர்ந்த திரு. செல்லையாவுக்கு திருமலை நீதிபதி ரூபா 500 அபராதம் விதித்தார்.

0 0 0

### திருவாசக விழா

சிவயோக சமாஜத்தில் திருமலை உதவி அரசாங்க அதிபர் திரு. சிவஞானம் தலைமையில் திருவாசகவிழா நடைபெற்றது.

இவ் விழாவில் பண்டிதர் இ. வடிவேலு கதாப்பிரசங்கம் நடத்தினார்.

### தேயிலைப் பெட்டிகள்

0 0 0

திருமலைத் துறைமுகத்தில் நடைபெற்றுவரும் வேலைநிறுத்தம் காரணமாக நாட்டின் பல பாகங்களிலுமிருந்து இத்துறைமுகத்தினூடாக தேயிலை ஏற்றுமதி செய்துவந்த 83-க்கு மேற்பட்ட லொறிகளில் இருக்கும் தேயிலைப் பெட்டிகள் இறக்காமல் அப்படியே இருக்கின்றது.

ஊரதீவு, சனி

ஊரதீவு இளந்தமிழர் மன்றத்தில் சங்கிலியன் போதனா நிலைய மாணவரின் கதம்பவிழா நடைபெற்றது. திருவள்ளுவர் பாலர் கழகத்தினரின் இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. ......

## சாட்சியமளிக்கக் கோரிக்கை

மல்லாகம், சனி

தேசிய உயர் கல்விச் சபைத் தலைவர் டாக்டர் மலலசேகராவிற்கு பல்கலைக்கழகம் நிறுவுவது பற்றி ஆராய்ந்து இடம் தெரிவுசெய்ய நியமிக்கப்பட்டுள்ள குழு முன்னிலையில் நேரில் சாட்சியமளிக்க ஒழுங்கு செய்து தருமாறு ஏழாலை கிராம சபைத் தலைவர் திரு. க. சிவகுரு தந்தி அனுப்பியுள்ளார்.

...மாதம் முதல் பதவிஉயர்வுடன் ஆறு மாதப் ப... பெறுவதற்காக ... புக்கு இடமாற்றம் செ... பட்டுள்ளார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த இவர் ஒரு ஆண்டு திருக்கோணமலையிலுள்ள தபாற்கந்தோரில் கடமையாற்றியுள்ளார்.

## விழா

சுழிபுரம், சனி

அகில இலங்கை உள்ளூராட்சி வாரத்தையொட்டி யாழ். மாவட்டத்திலுள்ள சகல சனசமூக நிலையங்களுக்கிடையே சமாஜ விழாவை நடாத்த வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. ஏ. ஜோசப் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இயல், இசை, விளையாட்டு ஆகிய துறைகளில் பெரும் போட்டிகளை நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.


விற்பனையாகின்றது!

1970

"ஈழநாடு" தினக் குறிப்பு

விலை: ரூ. 1-35 சதம்

"ஈழநாடு" Pocket Diary

விலை: -75 சதம்

ஏராளமான தகவல்கள்!
நவீன அமைப்பு!!

எமது பத்திரிகை விற்பனையாளர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

ஆத்திரத்திலிருந்து ஒழுங்கின்மை தோன்றுகிறது. விவேகமான எதிர்ப்பிலிருந்து ஒழுங்கு பிறக்கிறது. — மகாத்மாகாந்தி.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மார்கழி மாதம் 13-ந் திகதி (28 - 12 - 69)

## எண்ணெய் வளம்

வடபகுதியில் சிலஇடங்களில் எண்ணெய் வளம் இருப்பதுபற்றி ஆராய்ந்த பிரெஞ்சு நிபுணர்கள் தங்கள் அறிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பித்து விட்டுச் சென்றனர். அந்த அறிக்கையை அரசாங்கம் பரிசிலனை செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது அதன்பின் எதுவித தகவலும் வெளிவரவில்லை. பிரெஞ்சு நிபுணர்கள் நடத்திய ஆராய்ச்சியில் வடக்கின் சில இடங்களில் எண்ணெய் வளம் இருப்பதற்கான சாத்தியமுண்டென்பது தெளிவானது. தொடர்ந்து முயற்சி செய்தால் நிச்சயம் பயன் கிடைக்குமென எதிர்பார்க்கலாம்.

எண்ணெய் வயல்களை இந்தியாவில் பல இடங்களில் கண்டுபிடித்தபோது அந்த முயற்சியை முறியடிப்பதற்கு வெளிச்சக்திகள் பெரிதும் முயற்சி செய்தனவென்பது உலகறிந்த விஷயம். ஆனாலும் அந்த முயற்சியில் இந்தியா வெற்றியீட்டியது. பல இடங்களிலும் புதியபுதிய எண்ணெய் வயல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. எண்ணெய் சுத்திகரிப்புஆலைகள் நிறுவப்பட்டுள்ளன. தென்னிந்தியாவில் சில இடங்களில் எண்ணெய்ப் படிவங்களிருப்பதாக இப்போது ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. தமிழ் நாட்டில் சில இடங்களில் எண்ணெய்ப் படிவங்களிருப்பதாக சோவியத் நிபுணர்கள் தெரிவித்த கருத்து இலங்கையிலும் வடபகுதியில் எண்ணெய்ப் படிவங்களிருக்கலாமென்ற நம்பிக்கையை ஊட்டியது. இந்த நம்பிக்கை வலுப்பெற்று பிரெஞ்சு நிபுணர் கோஷ்டியொன்று ஆராய்ச்சி நடத்தியது இந்த ஆராய்ச்சியின்படி புங்குடுதீவு மன்னார் மற்றும் சில இடங்களில் எண்ணெய்ப் படிவங்களிருக்க[...] கண்டுபிடிக்க[...] [...]கூறப்படுகிறது,

இந்த முயற்சியில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு அரசாங்கம் தயங்குவதாகத் தெரி[...]

கிறது. இதைப் பயன்படுத்த அரசாங்கம் தவறவிடக்கூடாது. கொழும்பிலிருந்து வெளிவரும் பிரபல ஆங்கில காலைத் தினசரியொன்றின் நிருபருக்கு இந்திய பெட்ரோலிய அமைச்சர் டாக்டர் திரிகுணசென் அளித்த பேட்டியில் இலங்கை இந்தியப் பகுதியில் எண்ணெய் வயல்களைக் கண்டு பிடித்து எண்ணெய் உற்பத்தி செய்வதில் கூட்டு முயற்சி மேற்கொள்ளலாமென்று தெரிவித்திருக்கிறார். இந்தியாவின் தெற்குப் பகுதியிலும்இலங்கையின்வடக்கு பகுதியிலும்எண்ணெய்ப் படிவங்களிருக்கின்றனவென்றும் அவர் நம்பிக்கையுடன் கூறியிருக்கிறார். சோவியத் பிரெஞ்சு நிபுணர்களின் உதவியையும் இதற்காகப் பெறலாமென்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கும் டாக்டர் திரிகுணசென் எண்ணெய் உற்பத்திக்கு இந்தியா எடுத்த முயற்சிகளுக்கு ஏற்பட்ட இடையூறுகளையும் சுட்டிக்காட்டியிருப்பது நமது அரசாங்கத்திற்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

எண்ணெய்க் கம்பனிகளை இங்கு அரசு உடமையாக்கிய போது அதற்கு ஏற்பட்ட எதிர்ப்பும் வெளிநாட்டுஉதவிகள் நிறுத்தப்பட்டதும் மறந்துவிடக் கூடியவிஷயங்களல்ல. இங்கு எண்ணெய் வயல்கள் கண்டுபிடிக்கப்படுவதையும் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுவதையும் வெளிச்சக்திகள் தடுக்க பகீரத முயற்சி செய்யுமென்பதை நினைவில் கொண்டு அரசாங்கம் துணிந்து செயலிலிறங்க வேண்டும் கூட்டு முயற்சிக்கு இந்திய அமைச்சர் தெரிவித்துள்ள யோசனையை வைத்து இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் அபிப்பிராய பேதத்தை எப்படியாவது ஏற்படுத்தி இந்த முயற்சியை முறியடிக்கவும் இலங்கையின் வடபகுதியில் [...] எண்ணெய் வளமிருப்பதா[...] வேறு சில பிரச்னைகளை உருவாக்கி அதைத் தடுக்கவும் வெளிச்சக்திகள் முனையலாம். அதற்கு நம்மவ[...]

# பேராதனை, கொழும்பு இட நெருக்கடியைத் தீர்க்க

# யாழ்ப்பாணத்தில் நவீனமான பல்கலைக்கழகம் நிறுவவேண்டும்

**இடநெருக்கடி, இன்னும் பல பிரச்னைகள் தகுதிவாய்ந்த மாணவர்கள் உயர்கல்வி பெறுவதற்கு தடையாக இருக்கிறது. இதனைத் தீர்த்து ஆர்வமும் திறமையும்கொண்ட மாணவர்கள் உயர்ந்த கல்வியை நிறைவாகப் பெறுவதற்கு யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவுவதன் அவசியம்பற்றி இங்கு எடுத்துக்கூறுகிறார், கல்வித் துறையில் ஆராய்வும் அனுபவமும்மிக்க யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முன்னைநாள் அதிபர் திரு. ஏ. ஈ. தம்பர். பல்கலைக்கழக கமிஷனுக்கு இதனை அனுப்பிவைத்துள்ளார்.**

காமன்வெல்த் நாடுகளில் இலங்கை கல்வித் துறையில் மிகவும் பின் தங்கியிருப்பது துரதிருஷ்டவசமானதே. பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழிருந்த பாரதம் பல பல்கலைக்கழகங்களை 18ம் நூற்றுண்டிலேயே ஆங்காங்கே நிறுவி வளர்த்துவந்துள்ளது. இதனால் உயர் கல்வி அங்கு பரவிவளர்ந்துள்ளது. உயர்கல்வி பல்கலைக்கழகங்களில் மட்டும் அங்கு வளர்க்கப்படவில்லை. கலாச்சார நிலையங்களிலும் வளர்க்கப்பட்டு வந்துள்ளது வங்காளத்தில் விஸ்வபாரதி தமிழ்நட்டில் கலாக்ஷேத்திரா, டில்லியில் லலிதகலா அக்கடமி ஆகிய கலாசார நிலையங்கள் உயர்கல்வியை பரப்பி வந்துள்ளன. இவற்றுடன் பல்கலைக்கழக கல்லூரிகளான சமஸ்கிருத கல்லூரிகள். இசைக்கல்லூரிகள் கலைக்கல்லூரிகள் மற்றும் விஞ்ஞான, தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையங்கள் எல்லாம் உயர்கல்வியின் தரத்தை உயர்த்த உழைத்து வந்துள்ளன. இவற்றையெல்லாம் சற்றுஉற்று நோக்கும்பொழுது இலங்கைக்கு பல்கலைக்கழகங்கள் பல கனிஷ்ட கல்லூரிகள், பல உயர்கல்வி நிலையங்கள் ஆகியன கீழைத்தேய சங்கீதம், கலை ஆகியன போதிப்பதற்கும் விஞ்ஞானம் தொழில் நுட்பம் ஆகியன போதிப்பதற்கும் உயர்கல்வி நிலையங்களும் மேலும் தேவை என்பதன் அவசியம் உணரப்படுகிறது.

### தகுதியான இடம்

உயர்கல்வி வளர்ப்பதில் யாழ்ப்பாணம் நெடுங்காலமாக மிகவும் அக்கறை காட்டிவந்துள்ளது. உயர் கல்விக்கான சந்தர்ப்பங்களையும் யாழ்ப்பாணம் வழங்கி வந்துள்ளது. இதன்மூ[லம்] பல வாய்ப்புக்கள் நாட்டின் உள்ளேயும் வெளியேயும் [...]க்கு ஏற்பட்டது. இது [...] பல[...] சம்பந்தமாக சிலவற்றைக் குறிப்பிடலாம்.

(அ) அமெரிக்கன் மிஷ[...]

ன்ற பேரறிஞர்கள் தமது திறமையால், ஆற்றலால் இலங்கையிலும் இந்தியாவிலும் பெரும் புகழ்பெற்றார்கள். இதன் மூலம் யாழ்ப்பாணத்து மாணவரது சிறப்பை ஆராய்வுத் திறனை உயர்கல்விபெறுவதற்கு வேண்டியவசதியை உணர்த்தினார்கள். யாழ்ப்பாணத்தில் உயர்கல்வி பெறுவதற்கு செய்து கொடுக்கப்பட வேண்டிய வசதிகளையும் இதன்மூலம் அவர்கள் எடுத்துக்காட்டினார்கள்.

(இ) சில இரண்டாந் தர பாடசாலைகள் (யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாண மத்தியகல்லூரி. இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி) கல்கத்தா, சென்னை, லண்டன் பல்கலைக்கழகங்களின் இண்டர்மீடியட் பரீட்சைகளுக்காக மாணவர்களைத் தயார்செய்தன இந்த நூற்றுண்டின் முற்பகுதியில் இந்திய பல்கலைக்கழக பட்டதாரிகளும் பின் லண்டன் பல்கலைக்கழக பட்டதாரிகளுமான தமிழர்கள் பாடசாலைகளின் ஆசிரியர்களாகவும், தொழில் துறை அதிபர்களாகவும், தேசியத் தலைவர்களாகவும் பணிபுரிந்தனர்.

(ஈ) தத்துவஞானியும், அறிஞரும் பட்டதாரியுமான சுவாமி விபுலாநந்தர் யாழ்ப்பாணத்தில் ப[ல்] கலைக்க[...] [...]ழகம் அமைக்கப்படவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி வந்தார். ஜனத்தொகை, படிக்கும் ஆர்வம் இவை

ட்டி 1926-ம் ஆண்டளவில் பட்டப்படிப்பு படிப்பிப்பதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள சில இரண்டாந் தர பாடசாலைகள் அனுமதிக்கப்படவேண்டுமென சிபார்சு செய்திருந்தது.

(ஊ) நீடாம் கமிஷனும் தனது அறிக்கையில் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழ

**- ஏ. ஈ. தம்பர் -**

கம் நிறுவுவதன் அவசியத்தை வற்புறுத்தியிருந்தது. இதனால் யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள மாணவர்களும் பல்கலைக்கழக கல்வி பெற வாய்ப்பிருக்கும் என இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(எ) பல்கலைக்கழக அபிவிருத்தி சம்பந்தமான குணவர்த்தன கமிஷனும் இலங்கை பல்கலைக்கழக கட்டுப்பாட்டின்கீழ் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டியதன் அவசியத்துக்கு ஆதரவளித்திருந்தது.

(ஏ) பிரபல தமிழ் பிரமுகர்கள் அடங்கிய தமிழ் பல்கலைக்கழக இயக்கம் தமிழ் பகுதியில் விஞ்ஞானம் வைத்தியம் ஆகியனவற்றை போதிப்பதற்கான கல்லூரி யாழ்ப்பாணத்தில் அமை[...] வேண்டுமென[...] தெரிவித்துள்ள[...] [...]து. மற்றக் கலைகள் பயிற்றுவிப்பதற்கு மட்டக்களப்பு, [...]கோணமலை, வவ[...] ஆகிய பகுதிகளை அவர்கள் சி[...] செய்[...]

மாகாணத்துக்கு மட்டுமே அடுத்தபடியாக இருக்கிறார்கள். சமீப காலத்தில் கல்வி சம்பந்தப்படாத பல விஷயங்கள் காரணமாக யாழ்ப்பாணத்து மாணவர்கள் தொகை மட்டுப்படுத்தப்பட்டு வருவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன, மத, மொழி காரணமாகத் தகுதியான மாணவர்களைப் பல்கலைக்கழகத்தில் சேர்க்க விருப்பது தவறான ஒரு காரியம் பட்டதாரிகளிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைப்பதற்காகவும் பொருளாதார் விஷயத்தில் மிக்சப்படுத்தவும் இலங்கையில் பட்டதாரிகளைத் தயாரிப்பது கட்டுப்படுத்தப்பட வேண்டுமென பிற்போக்குவாதிகள் சிலர் கூறிவருவது சுதந்திரமான ஒரு நாட்டில் அர்த்தமற்றதொருவாதம். பேராதனை, கொழும்பு ஆகிய பல்கலைக் கழகங்களில் இடநெருக்கடியைத் தீர்ப்பதற்கு உகந்த ஒரு வழி யாழ்ப்பாணத்தில்நவீனமயமான ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவுவதே.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவிருக்கும் பல்கலைக் கழகம் கலாச்சாரம், விஞ்ஞானம், தொழில் நுட்ப துறைகளில் இந்த மாகாணத்தவர்கள் தேவையான உயர் கல்வி பெறுவதற்கு [...] வாய்ப்பை ஏற்படுத்தவேண்டும். தமிழிலும், சமஸ்கிருதத்திலும் இந்து மத தத்துவத்திலும் சங்கீதத்திலும் கலையிலும் சமூக விஞ்ஞானத்திலும் நவீன விஞ்ஞான தொழில் நுட்பத்துறை.

### ஆசிரியருக்குக் கடிதங்கள்

## விண்ணகப் பேச்சு

1-12-69-ல் வெளியாகிய ஈழநாட்டில் ஆவியுலகிலிருந்து நாவலர் பெருமான் விடுத்துள்ள அறிவுரைச் செய்தி எனது மனதை மிகவும் கவர்ந்துள்ளது. அன்னார் நேரில் பேசிக்கேட்டது போல் உணர்ந்தேன். ஆவியுலகின்தொடர்பால் நமக்கு ஏற்படக்கூடிய நன்மைகளை நன்கு எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

இத்தொடர்பை எமக்கு உதவச் செய்யும் ஈழநாடு' பத்திரிகையை மனமாரப் போற்றுகின்றேன் இப்புனித தொண்டை தொடர்பாக செய்துவருமாறு வேண்டிக் கொள்கிறேன். இதனால்நாத்திக மனப்பான்மை கொண்டுள்ள எவ்வளவோ மக்கள் பயனடையக்கூடும். செல்வி வித்தகம் நீடூழி வாழ்க! 'ஈழநாடு' பத்திரிகை நீடூழி வாழ்க!

அ. சிவசாமி
அளவெட்டி வடக்கு

0 0 0

'ஈழநாடு' பத்திரிகையில் ஆவியுடன் பேசுவது பற்றியும் ஆவியுலகுடன் பேசியவர்கள் பற்றியும் சில வாரங்களாக எழுதப்பட்டு வருவதை அவதானித்தேன். இந்த ஆவியுலகப் பேச்சு வெறும் புரட்டுஎன்பது யாவரும் அறிந்தது ஆனால் இதில் ஏதாவது உண்மை இருக்குமோ என ஐயுற்று நான் செல்வி வித்தகம் கூறியபடியே எல்லாவற்றையும் அடுக்கி நடுவில் ஒரு கிண்ணத்தை வைத்து ஆங்கிலந் தெரியாத இரு சிறுவர்களை கிண்ணத்தில் கையைவைக்கச் சொன்னேன் கிண்[...] அசையவே[...]ணம் [...]இல்லை இன்னும் எத்தனையோ சிறுவர்களைப் பிடித்து கிண்ணத்தில்கையை வைக்கச் சொன்னேன் கிண்ணம் அசையவேஇல்லை. இதிலிருந்து கிண்ணத்தை கை வைப்பவர்களே அசைத்து விட்டு ஆவியுலகுடன் பேசு[...]

கம்சர், விவேகானந்தர், விபுலகனந்தர் போன்ற சமயப் பெரியார்களின் தொடர்பு ஏற்படுவது எங்ஙனம்?

(iii) மகாத்மா போன்றோர் வாழும் அதே ஆவி உலகில் ஹிட்லர் போன்றோரும் வாழ்கின்றார்களா? அவ்வாறெனின் முத்தி (மோட்சம்) நரகப் பாகுபாடு எங்ஙனம் இருக்க முடியும்?

iv) 1-12-1969 'ஈழநாடு' இதழில் நாவலர் ஆவியின் கூற்றுப்படி திருவள்ளுவப் பெருமானும் உடன் வாழ்வதாகக் கூறப்பட்டுள்ளது. எனவே வள்ளுவர் காலம் பற்றியும் அவர் உலகவாழ்வு பற்றியும் தெளிவற்ற போக்குடைய எம்மிடையே உறுதியான முடிவைக்கூற வாய்ப்புள்ளமையை பயன்படுத்துவீர்களா? அத்துடன் வள்ளுவர் காலப் பெரியார்களுடனும் தொடர்புகொள்ளமுடியுமா? வள்ளுவர் காலத்தின் பின்னோர்களுடனும்தொடர் பேற்படுத்தலாமே? இவற்றால் வரலாறு கொண்டுள்ள எத்தனையோ ஐயங்கள் தீருமல்லவா?

(v) சைவசமயத்தைப்பற்றி ஆவியுலகிலேயே அதிகமாக அறிந்து கொண்டதாக நாவலர் கூறியுள்ளாரே. எனவே அமெரிக்க ஜனாதிபதி கெனடியும் தனது சமயத்தை உணர்ந்திருப்பாரே? இஃது உண்மையெனின் ஆவியுலகிலும் சமயப் பிரிவுகள் உண்டா?

vi) இவ்வாவியுலகினர் (குறிப்பான கென்னடி) ம[...]ன் சந்திரனில் இற[...] பற்றி[...]ங்கியமை [...] என்ன நினைக்கிறார்கள் அத்துடன் இவர்கள் வெவ்வேறு அண்டங்களுக்குச்செல்லும்சக்தியைக்கொண்டுள்ளனரா இல்லையேல் பூமியை அண்மித்தே உலவுகின்றனரா?

vii) ஆலயத்தில் தமிழிலர்ச்சனை தீண்டாமை ஒழிப்பு பற்றி நாவலரும், பேய்கள் [...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...கூறப்படுகிறது,

இந்த முயற்சியில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு அரசாங்கம் தயங்குவதாகத் தெரிகிறது. நிதி மற்றும் பலகாரணங்கள் இதற்கு இடையூருக இருக்கக்கூடும். ஆனுலும் இலங்கையில் எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பை இழந்துவிடக்கூடாது.

எண்ணெய் வயல்களைக் கண்டுபிடித்து எண்ணெய் உற்பத்தி செய்வதற்கு தானுகவே உதவி தேடி வந்திருக் ...எண்ணெய் வளமிருப்பது... வேறு சில பிரச்னைகளை உருவாக்கி அதைத் தடுக்கவும் வெளிச்சக்திகள் முனையலாம். அதற்கு நம்மவரையே கருவிகளாகப் பயன்படுத்தலாம்.

எண்ணெய் வயல்களைக் கண்டுபிடித்து உற்பத்தி செய்வது ஒரு பகுதியினருக்கோ ஒரு சிலருக்கோ ஆதாயம் கிடைக்கும் விஷயமல்ல. நாட்டிற்கே நன்மையான இந்த முயற்சியில் அரசாங்கம் தயங்காமல் உடனடியாக ஈடுபட வேண்டும்.

---

பல... சம்பந்தமாக சிலவற்றைக் குறிப்பிடலாம்.

(அ) அமெரிக்கன் மிஷனரிமாரால் ஸ்தாபிக்கப்பட்ட பற்றிக்கோட்டா ஸ்தாபனத்தின் 1823-ம் வருடம் முதலே யாழ்ப்பாண மாணவர் உயர்கல்வி பெறுவதற்கான உபகாரச்சம்பளம் பெறுவதற்கு தகுதியைப் பெற்ருர்கள்.

(ஆ) ஆறுமுகநாவலர், குமாரசுவாமிப் புலவர் போ...

...கழகம் அமைக்கப்படவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி வந்தார். ஜனத்தொகை, படிக்கும் ஆர்வம் இவை இரண்டையும் அவர் இது சம்பந்தமாகச் சுட்டிக்காட்டியிருந்தார். யாழ்ப்பாணம் கல்வித்துறையில் அடைந்திருந்த முன்னேற்றம்பற்றியும் அவர் எடுத்துக் கூறியிருந்தார்

(உ) பல்கலைக்கழக கல்வி சம்பந்தமான அக்பார்கமி...

...து. மற்றக் கலைகள் பயிற்றுவிப்பதற்கு மட்டக்களப்பு, திருக்கோணமலை, வவனியா ஆகிய பகுதிகளை அவர்கள் சி... செய்துள்ளார்கள்) ...து பல்கலைக்கழக இயக்கமும் யாழ்ப்பாணத்திலேயே பல்கலைக்கழகம் இருக்க வேண்டுமென வற்புறுத்தி வருகிறது.

கோவில்களுக்கும் தேவாலயங்களுக்கும் அடுத்ததாக யாழ்ப்பாண மாவட்டம் கல்விக்குப் பெயர் பெற்றுள்ளது. யாழ்ப்பாண குடாநாட்டின் பெரும் பகுதி பாடசாலைகளையும் கல்லூரிகளையும் கொண்டுள்ளது. பல கல்வி ஸ்தாபனங்கள் முதல்தரத்தைச் சேர்ந்தவை. இந்த கல்வி ஸ்தாபனங்கள் இலங்கைப் பல்கலைக்கழக பட்டப்படிப்புக்கு மாணவர்களைத் தயாரிக்கின்றன: இவர்கள் (யாழ்ப்பாண மாணவர்கள்) பேராதனை பல்கலைக்கழகத்தில் ஏற்படும் இடநெருக்கடி பிரச்னையை மேலும் அதிகரிக்கச் செய்கிருர்கள் என்று கூறலாம். கொழும்பு பல்கலைக்கழகத்தில் யாழ்ப்பாண மாணவருக்கு செய்யப்பட்டிருக்கும் வசதிகள் குறிப்பாக கலைப்பகுதி மாணவர்களுக்குப் போதியதாக இல்லை. இதுகுறித்து அதிருப்தியே தெரிவிக்கப்பட்டு வருகிறது.

## நல்ல தீர்வு

இப்பொழுதும் வடமாகாணத்திலிருந்து செல்லும் மாணவர் தொகை மேற்கு...

...வாய்ப்பை ஏற்படுத்தவேண்டும். தமிழிலும், சமஸ்கிருதத்திலும் இந்து மத தத்துவத்திலும் சங்கீதத்திலும் கலையிலும் சமூக விஞ்ஞானத்திலும் நவீன விஞ்ஞான தொழில் நுட்பத்துறை. மிருகவைத்தியம், விவசாயம் வைத்தியம், ஆசிரிய பயிற்சி கல்வீத்துறை ஆகிய சகல வித துறைகளிலும் மாணவர்கள் உயர் கல்வி பெறக் கூடியதாக இப்பல்கலைக்கழக பாடத்திட்டம் அமையவேண்டும்.

இந்த பல்கலைக் கழகம் வெறும் பட்டமளிக்கும் நிலையமாக இருக்காமல் ஆராய்ச்சித் துறையில் நல்ல பயனுள்ள கல்வியைத் தருவதாக இருக்க வேண்டும். விஞ்ஞானம், தொழில் நுட்பம், கைத்தொழில் துறைகளில் ஆராய்வைத் தூண்டுவதற்கான அடிப்படை அமைப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாக இருக்க வேண்டு. ஆதாவது இஸ்ரேல் பல்கலைக் கழகத்தை போன்று இருக்க வேண்டும்.

## பல்கலைக்கழக பெயர்

இந்த பல்கலைக் கழகம் பேராதனை, கொழும்பு பல்கலைக்கழகங்களின் அந்தஸ்தை ஒத்ததாக இருக்க வேண்டும். இதன் பெயர் எந்த ஒரு இனத்தையே மதத்தையோ, மொழியையோ குறிப்பதாக இருக்கக் கூடாது.

இந்த பல்கலைக் கழகம் வடமாகாணத்தில் யாழ்ப்பாண நகரின் ஒரு கரையில் இருக்கவேண்டும். இத...

---

# வடக்கில் பல்கலைக்கழகம் வழக்கறிஞர்கள் கூறும் வாதம்

**[யாழ்ப்பாணம் வழக்கறிஞர் சங்க விசேஷ கூட்டத்தில் வடக்கில் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும் என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி தேசிய உயர் கல்விச்சபைக்கு சங்கம் கீழ்க்கண்ட மகஜரை அனுப்பியுள்ளது.]**

பல்கலைக்கழகம் அமைக்கும் விஷயத்தில் கடந்த 7 வருடங்களாக அரசாங்கம் எடுத்த நடவடிக்கையை அவதானித்தால் யாழ்ப்பாணத்தில் நிறுவுவதன் அவசியத்தை அரசாங்கம் உணர்ந்திருக்கிறதென்பது புலனுகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள உயர்தர கல்லூரியை இதற்காகப் பயன்படுத்த அரசாங்கம் கருதியிருக்கலாம். அதுவே உண்மையான காரியமானுல் பரமேஸ்வராக் கல்லூரியில் ஏராளமான நிலமும் சர்வகலாசாலையை உடனடியாக ஆரம்பிப்பதற்கான கட்டட வசதிகளும் இருக்கின்றன. அதே போன்று இராமநாதன் கல்லூரியில் ஏராளமான காணியும் கட்டடங்களும் இருக்கின்றன. வெகு விரைவாக பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கே அரசாங்கம் இவ்வாறு முடிவு செய்திருக்கலாம் என நம்புகிருேம். அப்படியாயின் அதையும் நாம் வரவேற்கின்ருேம்.

ஆனுல்சேர் பொன்இராமநாதன் இவ்விரு கல்லூரிகளையும் ஸ்தாபிக்கும்போது கட்டுப்பாட்டிற்கு அமைய இவைகளை தருமத்திற்காக விட்டிருக்கிருர். இந்தக் கல்லூரிகள் சைவசமய வளர்ச்சிக்கான வித்தியாவிருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதே அக்கட்டுப்பாடு. அரசாங்கம் வடக்கே ஒரு பல்கலைக்கழகம் நிறுவ தீர்மானிக்குமானுல் அதுயாழ்ப்பாணத்தில் இருக்குமெனவும் அது பின்வரும் குறைபாடுகளை நிவர்த்திசெய்யுமெனவும் நம்புகிருேம். (1) இலங்கைப் பிரதேசத்தின் ஒருபகுதியில் நெருங்கியிருக்கும் குடிசனத்திற்கு உபயோகிக்கப்படும். (2) மற்றைய பல்கலைக்கழகங்களிலிருந்து அதிக தூரத்திலிருக்கும் யாழ்ப்பாணத்தில்ஸ்தாபிக்கப்படுவது பொருத்தமானது. (3) வடஇலங்கையிலிருந்து மற்றப்பகுதிகளுக்கு உயர்கல்வி பெற செல்ல வேண்டியேற்படாது. அண்மையான இடத்தில் கல்வி பெறலாம். (4) மற்றைய பல்கலைக்கழகத்தில் அமைக்கப்படாத குறையை நிவர்த்தி செய்யலாம். பிரதானமாக தமிழும், தமிழ் நாகரீகமும் இந்து பண்பாடும் இந்த உயர் பயிற்சி நிலையத்தில் பெறக்கூடியதாக இருக்கும். இவற்றிற்கு ஒரு பிரதான இடம் அமைக்கப்படும்.

தற்காலகல்விமுறை அதிக உயர்ந்தபடிகளில்திருப்திகரமாக இருக்கவில்லை. ஆராய்ச்சி நிபுணத்துவம் போன்றவற்றிற்கு இடமளிக்கப்படவில்லை. இலங்கை அந்நிய அரசாட்சிக் காலத்தில் அரசாங்கத்திலும் தனியார் துறையிலும் உத்தியோகம் வகிப்பதற்கு தகுந்தவர்களாக்க கல்வி ஊட்டப்பட்டது, புதுப்புது தொழில் முறை நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும். அதற்கு பொதுக்கல்வியும் உயர்தரக்கல்வியும் எமது பிள்ளைகளுக்கு ஊட்டப்படவில்லை. அதனுல் தொழிற்சாலைகள், ஸ்தாபனங்கள் உண்டாக்கப்படவில்லை. இதைக் கண்காணிப்பதில் வைத்து அந்தந்த இடத்திற்கு தேவையான கல்வி ஊட்டப்பட வேண்டும். அரசாங்கமும், கல்விப்பகுதியும் செலவைக் குறைப்பதற்காக சர்வகலாசாலைக்குஅனுமதிக்கப்படுபவர்களை சர்வகலாசாலையில் மட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. செலவைக் குறைக்க ஒரு பகுதியில் ஏற்படும் கூடிய செலவை இன்ெனுரு பகுதியில் எடுத்து சரிக்கட்டுகிறது. இப்படியான சூழ்நிலையில் மேலும் ஒரு சர்வகலாசாலை புதிதாக அமைக்கும்போது திறமையாகத் தெரிவு செய்து ஏற்ற இடத்தில் ஸ்தாபிக்க வேண்டும்.

இலங்கையில் பல பாகங்களுக்கிடையில் இருக்கும் வித்தியாசங்களையும் ஏற்றத்தாழ்வுகளையும் ஆராயந்து வேண்டியபடி தகுந்த கல்வி நிலையங்களை ஏற்படுத்துவது அவசியம். அதிலும் மாணவனுக்கும் அரசாங்கத்திற்கும் மிக இலகுவான சிக்கனமான முறையில் கல்வி அளிக்கப்பட வேண்டும்.

100 வருடங்களாக இலங்கையில் கல்விமுறைக்கு அமைவாக யாழ்ப்பாணம் கல்வி நிலையில் மற்றப்பகுதியிலும் பார்க்க முன்னேறியிருக்கிறது. யாழ்ப்பாண உயர்தர பாடசாலைகள் வடமாகாணத்திற்கு மட்டுமல்ல வடமத்திய மாகாணம், கீழ் மாகாணம் ஆகியவற்றிற்கும் ஏற்ற இடமாக இருந்து வந்துள்ளது. மிக அண்மையில் மன்னுர், திருமலை, மட்டக்களப்பு ஆகிய நகரங்களிலிருந்து பலர் யாழ்ப்பாணம் வந்து கல்விபயின்றுள்ளார்கள்.

வடக்கில் பல்கலைக்கழகம் நிறுவப்படாவிடில் கல்வித்துறையில் அதிகம் வளர்ச்சியடைந்த வடமாகாணத்தைக் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரிவை மட்டுப்படுத்துவதாக இருக்கும். ஏனெனில் பெருந்தொகையான உயர்தரக் கல்வி பயிலும் மாணவர் வெளியிடங்களுக்குப் போக வசதியில்லாமல் அவர்களின் கல்வி வளர்ச்சி தடைப்படுகிறது.

கடந்த ஏழு வருடங்களாக வட பகுதியில் பல்கலைக்கழகம் நிறுவ அரசாங்கங்கள் அடையாள மானியம் வழங்கிவந்திருக்கின்றன. கூட்டரசாங்கமும், தற்போதைய தேசிய அரசாங்கமும் இராமநாதன் பல்கலைக்கழகம் என்ற பெயரில் ஒன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்தன. அதை ஏன் புனராலோசனை செய்யவேண்டும்? இதற்குத் தகுந்த நியாயம் கண்டாலன்றி அரசாங்கத்தின் தீர்மானத்தை ஒரு விதத்திலும் மாற்றக்கூடாது

தற்போதிருக்கும் சர்வகலாசாலைகளைவிட மேலும் ஒரு சர்வகலாசாலை அமைப்பதானுல் அது தேசத்தின் எப்பகுதியில் அமைக்கப்படவேண்டுமென்பது பின்வரும் காரணங்களில் தங்கியுள்ளது. (1) அந்த சர்வகலாசாலை யாருக்கு உபயோகப்படும் என்பது. (2) மற்றைய சர்வகலாசாலைகள் இருக்கும் இடங்களுடன் புவியியல் நிலையை ஒப்பிட்டுப் பார்ப்பது, (3) மற்றைய பல்கலைக்கழகங்களில் அமைக்கப்படாத வசதிகளை புதிதாக அமைத்தல். (4) யாழ்ப்பாணத்தின் சுவாத்தியம் நீண்டகால கால நிலைக்கேடு இல்லாதஇடம். (5) கிழக்கு மாகாணத்துடன் ஒப்பிட்டு பார்க்துகும்போது நான்உமடங்கிற்கு மேற்பட்ட யர்தரக்கல்வி நிலையங்கள் உண்டு. 10 மடங்கிற்கு அதிகமானவர்கள் பொதுக்கல்வித் தராதர வகுப்பிலும், அதற்கு மேற்பட்ட வகுப்புகளிலும் கிழக்கு மாகாணத்திலிம் பார்க்க வடபகுதியில் கல்வி பயில்கின்றனர்.

---

யாழ்ப்பாணம், ஞாயிறு

கண் வைத்திய நிலையம் ஒன்றை காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு நிரந்தரமாக அமைத்து, அங்கு கடமையாற்ற ஒரு டாக்டரையும் நியமிக்குமாறு சுகாதார அமைச்சரிடம் கேட்கப்பட்டது.

---


## வின்ஸர் திரையில்

இன்று முதல்

நாகேஷ், விஜயநிர்மலா

வீரப்பன், சகஸ்ரநாமம்

மற்றும் பலர் நடித்த

## சீப்பு, சோப்பு, கண்ணாடி

[தினசரி நான்கு காட்சிகள்]

(சிறந்த நகைச்சுவைச் சித்திரம்)


---

...எத்தனையோ சிறுவர்களைப் பிடித்து கிண்ணத்தில்கையை வைக்கச் சொன்னேன் கிண்ணம் அசையவேஇல்லை. இதிலிருந்து கிண்ணத்தை கை வைப்பவர்களே அசைத்துவிட்டு ஆவியுலகுடன் பேசுவதாக வெறும் புரளியைக் கிளப்பிவிடுகிருர்கள் என்பது புலனுகிறது. ஆகவே இனியாவதுஇப்புரட்டுக்களை நல்ல ஒரு பத்திரிகையான 'ஈழநாட்டில்' பிரசுரிக்காது விடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் அப்படி ஏதாவது புரட்டுக்களை எழுதினுற்கூட அதை நம்ப இந்தப் பகுத்தறிவு உலகம் மறுக்கும் நாம் இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கும் காலம் மனிதன் சந்திரனில் கால்வைத்துவிட்ட காலம்.

மகா உத்தமன்

உரும்பராய்.

0 0 0

விண்ணகத் தொடர்பு பற்றி எழும் எனது சந்தேகங்களைத் தீர்த்துவைப்பீர்களென எதிர்பார்க்கிறேன். எனது சந்தேகங்களாவன.

(i எமது இந்து மதத்தில் மறுபிறப்புக்கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட தொன்று ஆனுல் விண்ணகத் தொடர் பின்படி இறந்தவர்களுடன் பேசமுடியுமெனின் மறுபிறப்பு பற்றிய விளக்கம் யாது?

(ii) இறைபக்தி மிகக் கொண்ட ஆன்மாக்களின் ஆவிகள் இறைவனுடன் இரண்டறக்கலக்கும் பாக்கியத்தைப் பெறுகின்றன. [உதாரணம் சமய குரவர்கள் போன்ருேர்] இதன்படி ஐந்தாம் சமயகுரவர் எனபடும் நாவலர், மற்றும் பரம...

...ஞல் கிராமப்புற மக்கள் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள இலகுவாக இருக்கும். திருநெல்வேலிக்கும் நல்லூருக்கும் சமீபித்ததாக இருப்பது நல்லது. பல்கலைக்கழக முழு வளவு 100 ஏற்கர் விஸ்தீரணத்துக்கு குறைவாக இல்லாதிருக்க வேண்டும்.

கட்டட அமைப்பு அரசாங்கத்தினுல் நன்கு திட்டமிடப்பட்டு அமைக்கப்பட வேண்டும், இலங்கை மக்களின் கலாசாரத்தையும், வட மாகாண மக்களின் கலாசாரத்தையும் இணைத்ததாகப் பல்கலைக்கழகக் கட்டடம் இருக்கவேண்டும். இந்தப் பல்கலைக்கழக மாணவர்கள் தமது இல்லங்களில் இருந்தோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட விடுதிகளில் இருந்தோ வந்து கல்விபெற வாய்ப்பளிக்கப்படவேண்டும்

---

...லும்சக்தியைக்கொண்டுள்ளனரா இல்லையேல் பூமியை அண்மித்தே உலவுகின்றனரா?

vii) ஆலயத்தில் தமிழிலர்ச்சனை தீண்டாமை ஒழிப்பு பற்றி நாவலரும், பேய்கள் இல்லையா உண்டா என்பது பற்றி பேரறிஞர் அண்ணுவும் இறைவனே இல்லையென்ற கம்யூனிஸ்ட்டுக்களின் ஆவிகளும் கொண்டுள்ள கருத்துக்களைப் பெற்றுத்தர முடியுமா?

விருப்பு வெறுப்பற்ற நிலையில் நடுநிலையில் உண்டான இச் சந்தேகங்களை ஒதுக்கிவிடாது உறுதியான தெளிவான பதிலைத் தருவீர்களென எதிர்பார்க்கிறேன்.

க.கோணேஸ்வரன்

திருக்கோணமலை

## பரிபாலனசபை

1-12-69ம் திகதி ஈழநாட்டில் 'மீண்டும் தலைவரானுர்' என்ற தலைப்பில் பிரசுரமான செய்தியில் எனது பெயரும் காரியக்குழு கமிட்டியில் சேர்க்கப் பட்டிருந்தது. நானும், இன்னும் நால்வரும் கோவில் நிர்வாகச் சட்டங்களுக்கும், 28-11-69 இல் காரியாதிகாரி தலைமையில் நடந்த கூட்ட நிகழ்ச்சி நிரலுக்கும் அடங்கியுள்ளவரல்லர் இருந்தும்காரியக்குழுவில்தேர்ந்தெடுத்தவர்களாக சேர்க்கப்படுள்ளோம்.

இந்தக்காரியக் கமிட்டியிலிருந்து உப தலைவர் உபகாரியதரிசி, தனுதிகாரி, இன்னும் மூன்று கமிட்டி அங்கத்தவர்களும் இராசிஞமாச் செய்துகூளனர்:

13-12-69ந் திகதி சுற்றறிக்கை விட்டு அறிவித்தல் கொடுத்த காரியக்கமிட்டி கூட்டத்திற்கு (கோப்பாய் பொலிஸ்பாதுகாப்புக்கொடுத்தும்) கோவில் மண்டபத்திற்கு 4 அங்கததவர்கள் தான் சமூகமளித்தனர்; கோரமில்லாததால் காலவரையின்றிக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இரு கோஷ்டிகளில் ஒரு கோஷ்டி நிருவாகசபை அங்கத்தவர்கள் சமூகமளித்திருந்த கூட்டத்தில் உத்தியோகத்தரைத் தெரிவுசெய்ததே இச் சீர்கேட்டுக்குக் காரணமாகும்.

வே. சி. ஐயாத்துரை

நீர்வேலி

---


### தேவை

ஈழநாடு ஸ்தாபனத்தில் வேலை செய்வதற்கு ஓர் பியோன் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும். ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட்ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு டிசம்பர்மாதம்28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org